1 '23

குமரி மலர்

பதிப்பாசிரியர்

ஏ. கே. செட்டியார்

விலை அணா 8

மலர் 12 | இதழ் 4

மன்மத - ஆடி

உள்ளுறை

		பக்கம்
1. அமெரிக்க அரசியல்	—'மாணவன்'	2
2. தமிழ்ப் பாடத் திட்டங்கள்	—ந. சுப்பு ரெட்டியார்	17
3. தேர்தல் ஏஜண்டுகள்		27
4. கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தங்கள்		31
5. எங்கள் யாத்திரை	—அ. பாலசுந்தரம்	35
6. அணைத் திட்டங்கள்		61
7. செய்திக் கோவை		66



திருவண்ணமலை

எம். கே. கிருஷ்ண செட்டியார்

அசோகா பாக்டரி

கோயமுத்தூர்

அமெரிக்க அரசியல்

'மாணவன்'

அரசியலில் மக்களிடையே அபிப்பிராய பேதம் உண்டாகும் பொழுது, அது வலுத்து உள் நாட்டுக் கலகம் ஏற்படாமல் தடுப்பதற்காகவே பல நாடுகள் தங்கள் அரசியலை ஜனநாயக முறையில் மக்களுக்காக மக்களால் மக்கள் ஆட்சிமுறையை வகுத்திருக்கின்றன. அத்தகைய ஜனநாயக அரசியல்களில் அமெரிக்க அரசியலும் ஒன்று.

அமெரிக்கா என்று பொதுவாக வழங்குவது வட அமெரிக்காவே யாகும். இதனை ஐக்கிய அமெரிக்க நாடுகள் என்று கூறுவார்கள். இந் நாட்டின் விஸ்தீரணம் சுமார் முப்பது லட்சம் சதுர மைல். இந்நாட்டில் கிழக்குக் கரையிலிருந்து மேற்குக் கரைக்குச் செல்ல வேண்டுமானால் அதன் தூரம் சுமார் மூவாயிரத்து இருநூறு மைல்.

இந் நாட்டின் பூர்வீகக் குடிகள் சிவப்பு இந்தியர். இவர்களை அமெரிக்க இந்தியர் என்றும் அழைப்பதுண்டு.

பதினாறும் நூற்றாண்டில் இங்கிலாந்திலிருந்தும், ஐரோப்பாவிலிருந்தும் பலர் இந்நாட்டுக்கு வந்து குடியேறினர். இன்று அமெரிக்காவில் உள்ள ஜனத்தொகையில் பாதிப்பேர் ஆங்கிலேய ரத்த சம்பந்தமுள்ளவர். மீதிப் பேரில் பெரும்பாலோர் ஐரோப்பாவின் பல நாடுகளிலிருந்து வந்தவர்கள். இவர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் நாட்டில் ஏற்பட்ட மதக் கொடுமைகளை அல்லது அரசியல் கொடுமைகளைச் சகிக்க முடியாமலோ அல்லது

அருணகிரிவிலாஸ்
சீயக்காய்பவுடர்
N. ஆறுமுகம்பிள்ளை.
காரைக்குடி.
B.S

தங்கள் நாட்டில் பிழைப்பதற்கு வழி இல்லாமலேதான் அமெரிக்காவுக்கு வந்து குடியேறினார்கள். ஆரம்பத்தில் கிழக்குக் கரையில் குடியேறிய இவர்கள் பதின் மூன்று 'காலனி'களில் வசித்தார்கள்.

பிரிட்டிஷ் காலனி

1607 ஆம் வருஷம் முதல், 1776 ஆம் வருஷம் வரையில் அமெரிக்கா பிரிட்டிஷாரின் காலனியாக-குடியேற்றநாடாக--இருந்தது. இந்தக் குடியேற்ற நாட்டில் ஆள்வோரும் ஆளப்படுவோரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களே.

காலனி ஒவ்வொன்றிலும் சட்டசபை ஒன்றுண்டு. தங்களுக்குத் தேவையான சட்டங்களை அவர்களே செய்து கொள்வார்கள். ஸ்தல ஸ்தாபனங்களை அமைப்பது, வரி விதிப்பது, வரவு செலவுத்திட்டம் தயாரிப்பது, சில சமயங்களில் வரவு செலவுத் தொகையை அனுமதிக்க மறுப்பதன் மூலம் தங்கள் கவர்னரின் செயல்களைக் கட்டுப்படுத்துவது முதலிய அதிகாரங்கள் சட்டசபைக்கு உண்டு.

உள் நாட்டு அரசாங்கங்கள்—அதாவது ஸ்தல ஸ்தாபனங்கள் ஆங்கிலேய முறையைப் பின்பற்றியே அமைந்தன. ஒவ்வொரு காலனியிலும் பல 'கவுண்டி'களும், ஒவ்வொரு கவுண்டியிலும் பல 'டவுன் ஷிப்பு'களும் இருந்தன. ஒவ்வொரு 'கவுண்டி'யிலும் நியாய ஸ்தல முண்டு. பெரிய குற்றங்களைக் காலனியிலுள்ள சுப்ரீம் கோர்ட் விசாரிக்கும். ஆனால் கடைசி முடிவு இங்கிலாந்திலுள்ள பிரிவி கவுன்சிலுக்குத் தான்.

காலனியிலுள்ள மக்கள், ஆங்கிலேயருக்குப் பரம்பரையாக உள்ள உரிமைகளை--அதாவது பொதுக் கூட்டம் கூடும் உரிமை, அரசாங்கத்துக்கு மனுச் செய்தல், ஜூரிகள் மூலம் விசாரிக்கும் உரிமை, தங்கள் பிரதிநிதியைத்

தேர்ந்தெடுக்கும் உரிமை ஆகியவைகளைத் தாங்களே வழக்கத்தில் கொண்டு வந்து விட்டனர்.

பிரிட்டிஷாரின் காலனியாக இருந்த காலத்தில், பெரும்பாலான நாட்களில் அமெரிக்கா பிரிட்டனுக்கு வரி செலுத்தவில்லை. ஆனால் பிரிட்டனிடமிருந்து எத்தகைய ராணுவ உதவியைப் பெறவும் இல்லை. பிரிட்டிஷ் அரசாங்கம் அமெரிக்காவைக் கானடாவிலுள்ள பிரெஞ்சுக்காரருக்கு விரோதமாகவும், பிரெஞ்சு இந்தியர்களுக்கு விரோதமாகவும் சண்டைபோடும்படி பலமுறை வற்புறுத்தியபோதிலும் அமெரிக்கா உறுதியாக மறுத்துவிட்டது. கடைசியாக பிரிட்டன் அமெரிக்காவின் மீது வரி விதித்தது. ஆனால் இங்கிலாந்திலுள்ள பார்லிமெண்டில் அமெரிக்கருக்குப் பிரதிநிதித்துவமில்லை என்றும் கூறிவிட்டது. பிரதிநிதித்துவமில்லாமல் வரி கொடுப்பதைப் பல அமெரிக்கர் விரும்பவில்லை. இம்மாதிரி வரி விதிப்பது தங்கள் முன்னோர்களின் உரிமைகளைப் பறிப்பதாகுமென்று அமெரிக்கர் கருதினர்.

வரி கொடா இயக்கம்

அமெரிக்கர் வரி கொடுக்க மறுத்து விட்டனர். பதின்மூன்று காலனிகளில் உள்ள அமெரிக்கர்களின் பிரதிநிதிகள் ஒன்றுகச் சேர்ந்து 1774ஆம் வருஷத்தில் "காண்டினெண்டல் காங்கிரஸ்" என்ற மகாசபையைக் கூட்டினர். இது சட்ட பூர்வமானதல்ல. இந்திய தேசீய காங்கிரஸ் மகா சபையைப் போலவே இது. இந்திய தேசீய காங்கிரஸ் மகாசபை மக்கள் உரிமை, சுதந்திரம் இவைகளைப் பற்றித் தீர்மானம் செய்ததுபோல, இந்த "காண்டினெண்டல் காங்கிரசும்" உரிமைச்சாசனத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. 1775ஆம் வருஷத்தில் சுயாட்சித் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றி ஜார்ஜ் வாஷிங்டன் என்னும் அமெரிக்கப் பெரியாரைத் தங்கள் சேனுதிபதியாக நியமித்தது.

அமெரிக்கர்களுக்கு மற்ருெரு செளகரியமும் இருந்தது. இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் கடல் தூரம் சுமார் மூவாயிரம் மைல். அந்தக் காலத்தில் வேகமாகப் போக்கு வரத்து வசதி கிடையாது. எனவே இங்கிலாந்திலிருந்து எத்தகைய படையெடுப்பும் வருவது என்பது மிகவும் அசாத்தியமானது. பிரெஞ்சு ஆசிரியர் ஒருவர் அமெரிக்காவின் எல்லைகளைக் குறித்துப் பின் வருமாறு கூறினர். "அமெரிக்காவின் தெற்கிலும் வடக்கிலும் பலமில்லாத அண்டை நாடுகள். (மெக்ஸிகோவும் கானடாவும்) கிழக்கிலும் மேற்கிலும் மீன்கள். (அட்லாண்டிக் மகா சமுத்திரமும் பசிபிக் மகா சமுத்திரமும்.)

1777-ஆம் வருஷத்தில் 'காண்டினெண்டல் காங்கிரஸ்' கூடி பலமில்லாத சமஷ்டி அரசியல் ஒன்றை வகுத்தது. இப்பொழுது பதின் மூன்று காலனிகளும் பதின் மூன்று ஸ்டேட்டுகளாக (ராஜ்யங்களாக) மாறிவிட்டன. காங்கிரசுக்கு ஒரே சபை. ஒவ்வொரு ஸ்டேட்டுக்கும் ஒரு ஓட்டு. காங்கிரசுக்கு நீதி இலாகாவோ நிர்வாக இலாகாவோ கிடையாது. இதனைஎல்லா ஸ்டேட்டுகளும் ஏகமனதாக ஆமோதித்தன.

'காண்டினெண்டல்காங்கிரஸ்' எல்லா ஸ்டேட்டுகளுக்கும் பொதுவாக நாணயச் செலாவணியை நடத்திற்று. இந்த நாணயத்தின் மதிப்பு வர வரக் குறைந்து கடைசியில் மதிப்பே இல்லாமல் போய்விட்டது. தற்பொழுது சர்வ வல்லமையுள்ள அமெரிக்க டாலருக்கு எவ்வளவு மதிப்போ அவ்வளவுக் கவ்வளவு மதிப்பில்லாமலிருந்தது அந்தக் காலத்தில். செல்லாக் காசுக்கு உதாரணம் காண்டினெண்டல் நாணயம். இம் மாதிரிப் பழமொழி அமெரிக்காவில் இன்னும் வழங்குகிறது.

பிலெடெல்பியா மகாநாடு

1787ஆம் வருஷத்தில் பிலெடெல்பியா நகரில் ஒரு மகாநாடு நடைபெற்றது. இதற்கு 'பிலெடெல்பியா கன் வென்ஷன்' என்று பெயர். மொத்தம் பதின் மூன்று ஸ்டேட்டுகளில் பன்னிரண்டு ஸ்டேட்டுகள் தான் இதில் பங்கெடுத்துக் கொண்டன. ரோடு ஐலண்டு என்னும் சிறிய ஸ்டேட் இதில் கலந்து கொள்ள மறுத்து விட்டது. பெரிய ஸ்டேட்டுகள் ஒன்று சேர்ந்தால் அவை சிறிய ஸ்டேட்டுகளைக் கொடுமைப் படுத்தும் என்ற பயமே இதற்குக் காரணம்.

பன்னிரண்டு ஸ்டேட்டுகளின் பிரதிநிதிகள் மொத்தம் ஐம்பத்தைந்து பேர். இவர்கள் நியாயவாதிகளும், நிலச்சுவான்தார்களும், பெரிய வியாபாரிகளுமே. இந்தப் பிரதி நிதிகளில் சிறு விவசாயியோ அல்லது தொழிலாளரோ ஒருவர் கூடக் கிடையாது.

மிகப் பலமுள்ள ஒரு சமஷ்டியை அமைக்க வேண்டும் என்பதும் அதன் மூலம் உள் நாட்டு நாணயத்தின் மதிப்பைக் காப்பாற்றி வியாபாரத்தைப் பெருக்க வேண்டுமென் பதுமே இந்தப் பிரதிநிதிகளின் விருப்பம்.

இந்த மகாநாட்டில் எதைப் பற்றிப் பேசுவதென்று வரையறுக்கப் படாததால், எல்லையற்ற சர்ச்சைகள் எழுந்தன.

ஒவ்வொரு ஸ்டேட்டும், அப்பொழுது தான் தாங்கள் அடைந்த சுதந்திரம், சமஷ்டி அரசாங்கத்தின் ஆதிக்கத்துக்கு வருவதை விரும்பவில்லை. ஒவ்வொரு பிரதிநிதியும் தமது ஸ்டேட் மீதுள்ள அபிமானத்தையும் தமது ஸ்டேட்டுக்குள்ள விசேஷ நன்மைகளையும் கருதினரே தவிர, நாட்டின் பொது நன்மையைக் குறித்துக் கவலை

கொள்ளவில்லை. அன்றியும் மக்களிடையே பழக்க வழக்கங்கள், அரசியல், மதம் முதலியவைகளில் வேறுபாடுகளும் இருந்தன.

எவ்வளவோ வேறுபாடுகள் இருந்தபோதிலும், சர்ச்சைகளின் பலனாக பின் வரும் உண்மைகள் புலனாயின:

பலமில்லாத சமஷ்டியின் காரணமாக எல்லா ஸ்டேட்டுகளும் மிகவும் சிரமப் பட்டிருக்கின்றன.

எல்லா ஸ்டேட்டுகளின் தேவையும் ஒன்றே. சட்டம், சுதந்திரம், சுயாட்சி ஆகியவைகளைப் பற்றி எல்லா ஸ்டேட்டுகளும் ஒருமித்த அபிப்பிராயம் கொண்டுள்ளன.

அந்நியர் படையெடுப்பிலிருந்தோ, வியாபாரப் போட்டியிலிருந்தோ எந்த ஸ்டேட்டுக்கும் தனியாகத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் சக்தி இல்லை.

எந்த ஸ்டேட்டும் அமெரிக்க இந்தியர் பிரச்னைகளைத் தனியாகச் சமாளிக்க முடியாது.

உள்நாட்டு ஆற்று வசதிகள், நீர்ப்பாசனங்கள் முதலியவற்றை எந்த ஸ்டேட்டும் தன்னந்தனியே அபிவிருத்தி செய்ய முடியாது.

நாடு முழுதும் தபால், பிரயாண வசதிகளும், வியாபாரத்துக்காக சாலைவசதிகளும் எல்லா ஸ்டேட்டுகளுக்கும் ஒரு பொதுவான தேவை.

மகாநாடு நான்கு மாதம் நடைபெற்றது. இடையே சில சிறிய ஸ்டேட்டுகளின் பிரதிநிதிகள், பலமுள்ள சமஷ்டியில் பெரிய ஸ்டேட்டுகளின் ஆதிக்கம் அதிகமாகி விடும் என்று கருதி, பயந்து, மகாநாட்டை விட்டு வெளியேறினர். மகாநாடு ஒன்றுமில்லாமலே போய் விடுமோ

என்ற ஐயமும் உண்டாயிற்று. கடைசியாக சிறிய ஸ்டேட்டுகளின் பயத்தைப் போக்கும் முறையில் அரசியல் வகுப்பதென்று முடிவு செய்தனர்.

மொத்தம் இரண்டு சபைகள் இருக்கும். ஒன்று கீழ் சபை; மற்றொன்று மேல் சபை. கீழ் சபைக்கு மக்கள் பிரதிநிதி சபை என்று பெயர். மேல் சபைக்குச் செனெட் என்று பெயர். மக்கள்பிரதிநிதிகளை மக்களே தேர்ந்தெடுப்பார்கள். மக்கள் பிரதிநிதிகள் மேல் சபை (செனெட்) அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். பிரதிநிதி சபையும் செனெட்டும் சேர்ந்து காங்கிரஸ் என்ற பெயரால் வழங்கும்.

சுயாட்சியின் ஆரம்பத்தில் அமெரிக்காவில் பதின்மூன்று ஸ்டேட்டுகள் தான். தற்பொழுது நாற்பத்தெட்டு ஸ்டேட்டுகளும் மூவாயிரத்துக்கு மேற்பட்ட 'கவுண்டி' களும் இருக்கின்றன. ஆரம்பத்தில் ஜனத்தொகை நாற்பது லட்சம். தற்பொழுது சுமார் பதினைந்து கோடி.

ஒவ்வொரு ஸ்டேட்டுக்கும்—அது சிறியதாக இருந்தாலும் சரி, அல்லது பெரிதாக இருந்தாலும் சரி—மேல் சபையில் (செனெட்) இரண்டே ஸ்தானங்கள் தான். ஆயிரத்து இருநூறு சதுர மைல் விஸ்தீரணமுள்ள ரோடு ஐலண்டு ஸ்டேட்டுக்கும், இரண்டு லட்சத்து அறுபத்தையாயிரம் சதுர மைலுள்ள டெக்ஸாஸ் ஸ்டேட்டுக்கும் மேல் சபையில் ஒரே மாதிரிப் பிரதிநிதித்துவம் தான். லட்சத்துப் பத்தாயிரம் ஜனத்தொகையுள்ள நெவாடா ஸ்டேட்டுக்கும் ஒரு கோடியே முப்பத்து நான்கு லட்சம் ஜனத்தொகையுள்ள நியூயார்க் ஸ்டேட்டுக்கும் மேல் சபையில் ஒரே மாதிரிப் பிரதிநிதித்துவம் தான். மொத்தம் 48 ஸ்டேட்டுகளுக்கு 96 செனெட் அங்கத்தினர்கள்.

மக்கள் பிரதிநிதி சபையில் அப்படியல்ல. ஒவ்வொரு ஸ்டேட்டின் ஜனத்தொகை, அது கொடுக்கும் வரிப் பணம்

முதலியவைகளைப் பொறுத்து அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப் பெறுவர். ஆனால் ஒவ்வொரு ஸ்டேட்டுக்கும் கட்டாயமாக ஓர் அங்கத்தினர் உண்டு. தற்பொழுது மக்கள் பிரதிநிதி சபையில் 435 அங்கத்தினர்.

பிலெடெல்பியா மகாநாட்டுத் தீர்மானங்கள் நிறைவேறின. மொத்தம் ஐம்பத்தைந்து பிரதிநிதிகளில் முப்பதொன்பது பேர் கையெழுத்திட்டனர். பதின் மூன்று ஸ்டேட்டுகளில் ஒன்பது ஸ்டேட்டுகளாவது இதனை அங்கீகரித்தால் தான், இத் தீர்மானங்கள் பயனுள்ள முறையில் அமுலுக்கு வரும். மிகச் சிரமத்தின் பேரிலேயே ஒன்பது ஸ்டேட்டுகள் இதனை அங்கீகரித்தன. மற்றவை பின்னால் சேர்ந்து கொண்டன.

நியூயார்க் நகரம் தாற்காலிகத் தலைநகரமாக விளங்கியது. 1789 ஆம் வருஷத்தில் ஜார்ஜ் வாஷிங்டன் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் முதலாவது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். ஜான் ஆடம்ஸ் முதலாவது உப ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

மேரிலாண்டு என்ற ஸ்டேட்டும் வர்ஜீனியா என்ற ஸ்டேட்டும் தங்கள் ராஜ்யத்தின் ஒரு சிறு பகுதியைத் தலைநகரத்துக்காக தானமாகக் கொடுத்தன. இதற்கு டிஸ்டிரிக்ட் ஆப் கொலம்பியா என்று பெயர். இங்கு தான், அமெரிக்காவின் தலைநகரமான அழகிய வாஷிங்டன் நகரம் இருக்கிறது. தங்கள் அருமைத் தலைவர் ஜார்ஜ் வாஷிங்டன் பெயரையே அமெரிக்கர் தங்கள் தலைநகருக்குச் சூட்டினர்.

ஓட்டுரிமை

அமெரிக்காவில் பாதிப்பேருக்குமேல் ஆங்கிலேய ரத்த சம்பந்த முடையவர்கள் என்று கூறினோம். மீதிப் பேரில், பெரும்பாலோர் ஐரோப்பியர். இது தவிர நீக்ரோக்களும்

அமெரிக்க இந்தியரும், ஜப்பானியர், சீனர், இந்தியர், அராபியர் இன்னும் பலரும் அமெரிக்காவில் வசிக்கின்றனர்.

சுயாட்சியின் ஆரம்பத்தில் மக்கள் ஜனநாயக முறையில் ஓட்டளிக்க வில்லை. யாருக்கு ஓட்டுரிமை என்று நிர்ணயிப்பது அந்தந்த ஸ்டேட்டுகளின் தனி உரிமையாக இருந்தது.

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த பேராசிரியர் வுட்ரா வில்ஸன் எழுதிய 'அமெரிக்க மக்களின் சரித்திரம்' என்ற நூலில், ஆரம்ப காலத்தில் ஜனத்தொகை சுமார் 40 லட்சம் என்றும், அதில் ஒரு லட்சத்து இருபதாயிரம் பேருக்குத் தான் ஓட்டுரிமை இருந்ததென்றும் கூறுகிறார்.

ஆரம்ப காலத்தில், குறிப்பிட்ட சொத்துள்ள அடிமைகளல்லாத வெள்ளைக்கார ஆடவரும் மத சம்பந்தமான பதவியுள்ள ஆடவரும் ஓட்டளிக்கலாம். 1860ஆம் வருஷத்தில் எல்லா ஸ்டேட்டுகளும், இருபத்தொரு வயதுக்கு மேற்பட்ட எல்லா வெள்ளைக்கார ஆடவருக்கும் ஓட்டுரிமை அளித்தன.

உள்நாட்டுக் குழப்பத்துக்குப் பின், நீக்ரோக்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்யப் பெற்றார்கள். எல்லா நீக்ரோக்களுக்கும் ஓட்டுரிமை வழங்கப்பெற்றது. எனினும் நிறவேற்றுமை உச்ச நிலையில் உள்ள தெற்கேயுள்ள பல ஸ்டேட்டுகள், நீக்ரோக்கள் ஓட் செய்வதற்குப் பலவித இடையூறுகளை ஏற்படுத்தித் தடை செய்தன. அமெரிக்கா, தனது நாட்டுப் பெண்களுக்கு 1920ஆம் வருஷத்தில் தான் ஓட்டுரிமை அளித்தது.

மேல்சபை (செனெட்) அங்கத்தினர்களை, பிரதிநிதிகள் சபை அங்கத்தினர் தேர்ந்தெடுப்பது மக்களுக்குப் பிடிக்க வில்லை. மக்கள் கிளர்ச்சி வலுத்ததன் பயனாக

1913ஆம்வருஷம் இம் முறை மாற்றப்பெற்று இப்பொழுது மக்களே செனெட்டர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். செனெட்சபை அங்கத்தினரின் பதவிக்காலம் ஆறு வருஷம். ஆனால் இரண்டு வருஷத்துக்கு ஒரு முறை, செனெட் அங்கத்தினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் தேர்ந்தெடுக்கப் பெறுவர். இந்த முறையினால் செனெட் சபையின் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர், எப்பொழுதுமே நான்கு வருஷ அநுபவமுள்ளவர்களாய் இருப்பார்கள்.

மக்கள் பிரதிநிதி சபை அங்கத்தினர் இரண்டு வருஷத்துக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப் பெறுவர். ஒரே சமயத்தில் எல்லா அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப் பெறுவர். ஒரே சமயத்தில் எல்லோருடைய பதவி காலமும் முடிவடையும்.

செனெட் சபை அங்கத்தினருக்கும் மக்கள் சபை அங்கத்தினருக்கும் ஒரே மாதிரிச் சம்பளம் தான். ஒவ்வொருவருக்கும் வருஷத்துக்குப் பதினையாயிரம் டாலர்—சுமார் எழுபதாயிரம் ரூபாய். இதில் ஆறில் ஒரு பங்கு அலவன்ஸாகக் கருதப்படும். இந்த அலவன்ஸுக்கு வருமான வரி விலக்கு உண்டு.

ஜனாதிபதி தேர்தல்

அமெரிக்காவில் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பது ஒரு தனி முறை.

அமெரிக்காவில் முக்கியமான அரசியல் கட்சிகள் இரண்டு. இவை டெமொகிராடிக் கட்சியும் ரிபப்ளிக்கன் கட்சியும் ஆகும். ஒவ்வொரு ஸ்டேட்டிலும் இந்த இரண்டு கட்சிகளும் உள்ளன. ஒவ்வொரு ஸ்டேட்டிலுமுள்ள டெமொகிராடிக் கட்சி அங்கத்தினர்கள் தங்கள் பிரதி

நிதிகளைத் தேர்ந்தெடுத்து மகாநாட்டுக்கு அனுப்புவார்கள். அமெரிக்காவின் முக்கிய நகரங்கள் ஒன்றில் நடைபெறும் இம் மகாநாட்டுக்கு "நாஷனல் கன்வென்ஷன்" என்று பெயர். இந்த மகாநாட்டில் ஒவ்வொரு ஸ்டேட்டும் தங்களுக்கு விருப்பமானவர் பெயரை ஜனாதிபதி தேர்தலுக்குப் பிரேரேபிக்கும். ஜனாதிபதியும் உப ஜனாதிபதியும் அமெரிக்காவில் ஒன்றாகச் சேர்ந்தே தேர்ந்தெடுக்கப்பெறுவர். ஜனாதிபதி தேர்தலுக்கு நிற்பவர், தமது உப ஜனாதிபதி அபேட்சகர் யார் என்பதை முன் கூட்டியே சொல்லிவிடுவார். ஜனாதிபதி அபேட்சகரைத் தேர்ந்தெடுக்கும் பொழுது, உப ஜனாதிபதி அபேட்சகரையும் சேர்ந்தே தேர்ந்தெடுக்கின்றனர்.

இம்மாதிரியே ரிபப்ளிக்கன் கட்சியினரும் மகாநாடு கூடி, தங்கள் கட்சி ஜனாதிபதி அபேட்சகரையும் உப ஜனாதிபதி அபேட்சகரையும் தேர்ந்தெடுப்பர்.

பின்னர் எல்லா ஸ்டேட்டுகளிலும் நான்கு வருஷத்துக்கொரு முறை, நவம்பர் மாதம் நாலாந் தேதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறும். ஒவ்வொரு ஸ்டேட்டிலும் மக்கள் சபைப் பிரதிநிதிகளையும் மேல் சபை (செனெட்) பிரதிநிதிகளையும் மக்கள் தேர்ந்தெடுப்பர். ஜனாதிபதி தேர்தலில் ஒவ்வொரு ஸ்டேட்டுக்கும்—பொது மக்களுக்கு அல்ல—குறிப்பிட்ட ஓட்டுகள் உண்டு. பொதுத் தேர்தலில் ஒரு ஸ்டேட்டில் எந்தக் கட்சி அங்கத்தினர் அதிகப்படியான ஓட்டுகளைப் பெறுகிறாரோ அந்தக் கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதி அபேட்சகருக்கு அந்த ஸ்டேட்டுகளின் ஓட்டுகள் சேரும். இம்மாதிரி நாற்பத்தெட்டு ஸ்டேட்டுகளின் ஓட்டுகளுக்கு "எலெக்டரல் காலேஜ்" என்று பெயர். இம்மாதிரி எந்த அபேட்சகர் அதிகப்படியான ஸ்டேட் ஓட்டுகளைப் பெறுகிறாரோ அவர் தான் ஜனாதிபதி.

"எலெக்டரல் காலேஜ்" என்பது அரசியல் அமைப்பில் உள்ளதல்ல. அமெரிக்கர்கள் பல ஆண்டுகளாகக் கையாண்டு வரும் வழக்கமே யாகும்.

ஒரு ஸ்டேட்டில் ஒரு கட்சியின் பிரதிநிதி 49 சதவிகித ஓட் வாங்குகிறார் என்று வைத்துக் கொள்வோம். அதில் எள்ளளவும் பிரயோஜனமில்லை. 51 சதவிகித ஓட் வாங்கிய எதிர்க் கட்சி அங்கத்தினருக்கே ஸ்டேட் ஓட்டுகள் கிடைக்கும்.

இந்த வழக்கத்திலுள்ள முக்கியமான தீமையைக் குறித்து டேவிட் குஷ்மன் காயில் என்ற பிரபல அமெரிக்க ஆசிரியர் குறிப்பிட்டிருக்கிறார். ஜனத்தொகை அதிகமாக உள்ள சில ஸ்டேட்டுகளில் ஒருவருக்கு அதிகமான பொது ஜன ஓட் கிடைக்கலாம். மற்றொருவர் ஜனத்தொகை அதிகமில்லாத ஸ்டேட்டுகளில் வெற்றி பெற்று அவருக்கு ஸ்டேட் ஓட்டுகள் அதிகமாகக் கிடைக்கலாம். இம் முறையினால் அதிக பொது ஜன ஓட் வாங்கிய ஒருவர், ஸ்டேட் ஓட் இல்லாமையால் தோல்வி யடையலாம். இதற்கு உதாரணமாக, 1888ஆம் வருஷத்தில் அதிகமாக பொது ஜன ஓட் பெற்ற குரோவர் கிளீவ் லண்ட் தோல்வி யுற்றார் என்றும் குறைவாக பொது ஜன ஓட் பெற்ற பெஞ்சமின் ஹாரிஸன் ஜனாதிபதியானார் என்றும் ஆசிரியர் காயில் எடுத்துக் காட்டுகிறார்.

ஜனாதிபதியை நான்கு வருஷங்களுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கிறார்கள். ஜனாதிபதியின் வருஷச் சம்பளம் ஒரு லட்சம் டாலர்—சுமார் நாலே முக்கால் லட்ச ரூபாய்.

காங்கிரஸின் எந்தச் சட்டத்தையும் நிராகரிக்க ஜனாதிபதிக்கு உரிமை உண்டு. அச் சட்டம் இரண்டு பங்கு அங்கத்தினர்களால் ஆதரவு பெற்றால் தான் சட்டமாகும்.

ஜனாதிபதியின் செய்கையை—அரசியல் நிர்ணயத்தின் படி அவருக்குள்ள சேனாதிபதி அதிகாரத்தைக் கூட, பணம் அநுமதிக்க மறுப்பதன் மூலம் செனெட் சபை நிராகரிக்கக் கூடும்.

எல்லா பெரிய பதவிகளும், சமஷ்டி நீதிபதிகளின் பதவிகளும், ஜனாதிபதியின் நியமனமே யாகும். ஆனால் இதற்குச் செனெட் சபையின் சம்மதம் வேண்டும்.

காங்கிரசின் சட்டங்களைச் செல்லுபடியாகாது என்று நிராகரிக்க சமஷ்டி நீதி மன்றத்துக்கு அதிகாரமளிக்க அரசியல் நிர்ணய சபை தவறி விட்டது. ஆனால் நடை முறையில் ஏற்பட்ட சம்பவங்களினால் இந்த அதிகாரத்தைச் சமஷ்டி நீதி மன்றம் தானே மேற்கொண்டது.

ஜனாதிபதி உள்பட எல்லா பெரிய பதவிக்காரர்களையும் நீக்க காங்கிரஸுக்கு அதிகார முண்டு. இந்த விஷயத்தில் மக்கள் சபை குற்றம் சாட்டும். செனெட் சபை நீதி மன்றமாக இருந்து விசாரிக்கும். ஜனாதிபதி ஜான்ஸனை பதவியிலிருந்து நீக்க முயற்சித்தனர். ஒரு ஓட்டினால் அவர் தப்பினார். செனெட் சபை இது வரை நான்கு பேரை—அனைவரும் சமஷ்டி நீதிமன்ற நீதிபதிகள்—பதவியிலிருந்து நீக்கியது. அமெரிக்க அரசியலில் பல திருத்தங்கள் செய்தனர். முதலாவது பத்துத் திருத்தங்களுக்கு (Bill Of Rights) உரிமை மசோதா என்று பெயர். நீக்ரோக்களின் அடிமைத் தளையை நீக்கவும், பெண்களுக்கு ஓட்டுரிமை அளிக்கவும் திருத்தங்கள் நிறைவேறின.

ஜனாதிபதி பிராங்லின் டி. ரூஸ்வெல்ட் அமெரிக்கர்களிடையே மிகச் செல்வாக்கு பெற்றவர். மூன்று முறை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். எவ்வளவு நல்லவரானாலும் ஒருவர் தொடர்ந்து பன்னிரண்டு வருஷம்

ஜனாதிபதியாக இருப்பது, அமெரிக்கர்களின் ஜனநாயக உணர்ச்சிக்குப் பொருந்தவில்லை. எனவே ஒருவர் இரண்டு முறைக்கு மேல் ஜனாதிபதியாக இருக்கக் கூடாது என்பது தான் அமெரிக்க அரசியலில் கடைசித் திருத்தம்.

அமெரிக்க அரசியல் ஏற்பட்டதிலிருந்து இது வரை அரசியல் சட்டத்துக்கு இருபத்தொரு திருத்தங்கள் நிறைவேற்றியிருக்கின்றனர்.

தமிழ்ப் பாடத் திட்டங்கள்

ந. சுப்பு ரெட்டியார்

தாய்மொழி

மக்கள் தம் கருத்துக்களைப் பிறருக்கு உணர்த்துவதற்குச் சிறந்த கருவியாக இருப்பது பன்னெடு நாட்களாக அவர்கள் வளர்த்துப் பண்படுத்திய மொழியாகும். உலகில் பல்வேறு மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசியும் எழுதியும் தம் கருத்துக்களை உணர்த்தி வருகின்றனர். பிறந்தது முதல் இறக்கும் வரை-தொட்டிலிலிருந்து சுடுகாடு வரை ஒருவர் கேட்டும் பேசியும் வரும் மொழியை அறிஞர்கள் தாய்மொழி யெனக் குறிப்பர். குழந்தை பிறந்து வளர்ந்து மொழி பயிலுங்கால் அதன் தாயால் முதலில் பாலூட்டிச் சீராட்டித் தாலாட்டிப் பாராட்டிப் பயிற்றப்படும் மொழியைத்தானே தாய்மொழி யென்று வழங்க வேண்டும்? இத்தகைய தாய்மொழி வாயிலாகக் கல்வி கற்பிக்கப் பெற்றால் மாணுக்கர்கள் புதிய கருத்துக்களை உணர்வதற்கு எளிதாக இருக்கும்; தாம் அறிந்தவற்றைப் பிறர்க்கு உணர்த்துவதிலும் சிரமம் இராது. இவ்வுண்மையைக் கல்வி நிபுணர்கள் நீண்ட காலமாகவே உணர்ந்து வருகின்றனர். இதை நன்முக உணர்ந்த ராஜாஜி அவர்கள் 1937–ல் தாம் முதலமைச்சராக இருந்தபோது உயர்நிலைப் பள்ளிகளில் தாய்மொழி கற்பிக்கும் வாயிலாக அமைய வழி வகுத்தனர். தொடக்கத்தில் பல எதிர்ப்புக்கள் இருந்தபோதிலும் நாளடைவில் அவர் வகுத்த முறை வெற்றியடையத் தொடங்கியது. தாய்மொழியைக் கற்பிக்கும் வாயிலாகக் கொண்டு

கற்பித்து அநுபவம் பெற்ற ஆசிரியர்கள் அதன் பயனை நன்கு உணர்வார்கள். கருத்துக்களை மனத்தில் வாங்கிக் கொள்வதற்குப் பிறமொழி எவ்வாறு தடையாக இருந்தது என்பதையும், ஒருவாறு அறிந்த கருத்துக்களை அம்மொழியிலேயே உணர்த்துவதற்கு எவ்வாறு அரிதாக இருந்தது என்பதையும் அவர்கள் நன்கு அறிவார்கள். இன்று கல்லூரிகளிலும் தாய்மொழியைக் கற்பிக்கும் வாயிலாக்க வேண்டுமென்று பல அறிஞர்கள் கூறி வருகின்றனர். இது பற்றி ஆராய்வதற்கு அண்மையில் கல்வி அமைச்சர் கூட்டிய மாநாட்டையும் அனைவரும் அறிவர்.

கல்லூரிகளில் கற்பிக்கும் வாயில்

இன்று கல்லூரிகளில் தாய்மொழி மூலம் கல்வி கற்பிக்கப் பெற்றால் மாணக்கர்கள் கருத்துக்களை எளிதில் புரிந்து கொள்வர் என்பதை அறிஞர்கள் அனைவரும் ஒருமுகமாக ஒத்துக்கொள்கின்றனர். ஆனால் தாய்மொழியைக் கற்பிக்கும் வாயிலாக ஆக்குவதற்கு அவர்கள் ஆயத்தமாக இல்லை. பல்கலைக் கழகத்தினரும், அரசினரும் எவ்வாறு இதை நடைமுறைக்குக் கொண்டு வருவது என்பதில் ஒரு தெளிவான முடிவுக்கு இன்னும் வந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் தாய்மொழிகளில் பல துறைகளிலும் பல புத்தகங்கள் வெளிவராததாலும் பல துறைகளிலுமுள்ள கருத்துக்களை உணர்த்துவதற்கு வரையறை செய்யப் பெற்ற கலைச் சொற்கள் ஆக்கப்படாமையினாலும் இத்திட்டம் வெற்றிப் பாதையில் செல்ல முடியாது என்று கருதுகின்றனர் போலும்! இதனால்தான் பி. டி. தேர்வுக்கு உரிய விருப்பப் பாடங்களைத் தாய்மொழிகளில் கற்பிக்கலாம் என்று செய்யப்பட்ட தாற்காலிக முடிவும் சென்னைப் பல்கலைக் கழகத்தினரால் தாற்காலிகமாகக் கைவிடப்பட்டிருக்கிறதோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. தாய்மொழிகளில் பல துறைகளிலும் பல புத்தகங்கள் வெளியாகி பல

துறைகளிலுமுள்ள கலைச் சொற்கள் வரையறை செய்யப்பட்ட பிறகு தாய்மொழியைக் கற்பிக்கும் வாயிலாக்கலாம் என்று எண்ணுவது நடைமுறைக்கு ஏற்ற முடிவு அன்று. தாய்மொழி கற்பிக்கும் வாயிலாக அமைந்த பிறகு தான் பல புத்தகங்கள் பல துறைகளிலும் வெளிவரக் கூடும். அப்பொழுதுதான் அநுபவம் வாய்ந்த பல அறிஞர்கள் புத்தகங்களை எழுதுவர்; வெளியிடுவோரும் அவற்றைப் பிரசுரிக்க முன் வருவர். தொடக்கத்தில் மாணாக்கர்களும் ஆசிரியர்களும் அநுபவிக்கக் கூடிய கஷ்டங்களை எப்பொழுதும் அநுபவித்தே தீர வேண்டும். சற்று யோசித்து செயலாற்றத் தொடங்கினால் ஓரளவு இக் கஷ்டங்களைச் சிறிது நிவர்த்தி செய்யக் கூடும்.

பயிற்சிக் கல்லூரிகளில்

பயிற்சிக் கல்லூரிகளில் விருப்பப் பாடங்களை மட்டிலும் தாய் மொழியில் கற்பிக்கலாம் என்று சென்னைப் பல்கலைக் கழகத்தினர் செய்த முடிவு சரியானதாகத் தோன்றவில்லை. ஒவ்வொரு பாடத்திலும் கல்வித்துறை பற்றிய பல கருத்துக்கள் உள நூல் பற்றிய பல கருத்துக்கள் கற்பிக்கும் முறை பற்றிய பல கருத்துக்கள் விரவி வரக் கூடுமாதலால் அத்துறைகள் பற்றிய பாடங்களையும் தாய் மொழிகளிலேயே கற்பித்தால்தான் அனைத்தும் எளிதாக அமையும். இம் மூன்று துறைகளையும் சுகாதாரம், குடிமைப் பயிற்சி, உடற்பயிற்சி ஆகிய துறைகளையும் தாய் மொழியிலேயே சேர்ந்தாற்போல் கற்பிப்பதற்குத் திட்டம் வகுக்கப் பெற்றால் அது வெற்றியுடன் நடைபெறும். செகண்டரி கிரேடு பயிற்சி பெறும் ஆசிரியர்கள் எல்லாப் பாடங்களையும் பல்லாண்டுகளாகத் தாய்மொழியிலேயே கற்று வருகின்றனர். அதனால் பல துறை பற்றிய கலைச் சொற்கள் தாய்மொழிகளில் நடைமுறைக்கு

வந்துள்ளன. அவர்கள் புத்தகங்கள் எழுதிய பிறகு தாய் மொழிக் கல்வியைத் தொடங்கவில்லை. அதுபோலவே ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் எல்லாப் பாடங்களையும் ஒரே காலத்தில் தாய் மொழியில் கற்பிக்கலாம் என்று முடிவு செய்தால் எல்லாம் சரியாக அமைந்துவிடும். அரசினர் மனம் வைத்தால் சில புத்தகங்களை வெளிவருமாறு செய்யலாம். நடைமுறை ஆண்டுக்கு உள நூல், முறை நூல், கல்வித்துறை நூல், கணிதம், அறிவியல் சமூக இயல் முதலிய விருப்பப் பாட நூல்கள் ஆகிய ஒவ்வொரு துறையிலும் துறை ஒன்றுக்கு இரண்டு பரிசுகள் தருவதாக அறிக்கை அரசினரால் வெளியிடப் பெற்றால் பல மொழி அறிஞர்கள் நூல் எழுதும் செயலில் இறங்கக் கூடும். பரிசுத் தொகையைத் துறையின் அருமை நோக்கி அதிகமாக்கியும் புத்தகங்கள் வெளிவரவேண்டிய தேசியத் திட்டமாக வரையறுத்தும் அறிக்கை வெளியானால் புத்தகங்களின் கையெழுத்துப் பிரதிகள் வெகு விரைவில் ஆயத்தமாகிவிடும். பிரதிகளை ஆராய்வதற்குத் தக்க அறிஞர்கள் அடங்கிய குழு ஒன்று நிறுவி அவர்களால் பரிசுக்குரிய பிரதிகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை அரசினரே வெளியிடலாம். இவ்வாறு ஒன்றிரண்டு புத்தகங்கள் வெளிவந்தால் தொடக்கத்தில் இத்திட்டம் சிரமமின்றி செயற்படக் கூடும். திட்டம் செயற்படுங்கால் பல புத்தகங்கள் தொடர்ந்து வெளிவருதல் கூடும். ஐந்தாண்டுத் திட்டங்களில் பல துறைகளில் ஏராளமாக செலவிடும் அரசினர் கல்வித் துறையிலும் ஒரு சிறிது இவ்வாறு செலவிட்டுத் தாய்மொழியை வளர்க்கலாம்.

வேறு சில அம்சங்கள்

தாய்மொழிக் கல்வி திறம்பட நடைபெறுவதற்கு வேறு சில அம்சங்களிலும் அரசினரும் கல்வி நிபுணர்களும், பல்கலைக் கழகத்தினரும் கவனம் செலுத்த வேண்டும்.

அவற்றையும் ஒருசிறிது ஈண்டு ஆராய்வோம். உயர் நிலைப் பள்ளிகளில் ஆங்கிலம் கற்பிக்கும் வாயிலாக இருந்த போது ஆங்கிலத்தைக் கற்பித்த ஆசிரியர்களே பிற பாடங் களையும் ஆங்கிலத்தில் கற்பித்தனர். பிற பாடங்களைக் கற்பிக்கும்போதும் அவர்கள் ஆங்கில மொழியில் எழுத்தி லும் பேச்சிலும் மாணுக்கர் செய்யும் இலக்கண வழுக்கள், மரபுப் பிழைகள் முதலியவற்றைக் களைவதில் அக்கறை கொண்டிருந்தனர். பிற பாடங்களைப் பயிற்றும்போதும் அவர்கள் மொழியாசிரியர்களாகவும் பணியாற்றினர். இதனுல் மாணுக்கர்களின் ஆங்கில அறிவு வளர்ந்தது. இன்று தமிழில் பிற பாடங்களைப் பயிற்றும் ஆசிரியர் களின் நிலை என்ன? அவர்கள் மொழியைப் பற்றிச் சிறிது கூடச் சிந்திப்பதில்லை; அக்கறை காட்டுவதும் இல்லை. கருத்தை மட்டுமே கவனிக்கின்றனர். எழுத்துப் பிழைகள், இலக்கணப் பிழைகள், மொழி மரபுகள் சொற்ருெடர் குறைகள் முதலியவற்றில் கவனத்தைச் செலுத்தி மொழியை வளர்ப்பது தமிழாசிரியர்களின் வேலை என்று கூறித் தம் பொறுப்பைத் தட்டிக் கழிக்கின்றனர். உயர் நிலைப் பள்ளிகளில் தமிழ் கற்பிக்கும் வாயிலாக வந்ததால் மாணுக்கர்களின் கருத்தறிவில் வளர்ச்சி காணப்படுகிறதே யன்றி மொழியறிவில் வளர்ச்சி காணப் பெறவில்லை. இன் றைய சூழ்நிலையில் ஓரளவு மொழியறிவில் தேர்ச்சி காணப் பெற்ருலும் அது பிற பாடங்களைத் தமிழில் கற்பதால் பெற்றது அன்று; அது வெளியுலகச் சூழ்நிலையால் ஏற் பட்டது. கல்லூரியிலும் தமிழ் கற்பிக்கும் வாயிலாக அமைந்து வெற்றி காண வேண்டுமாஞல் உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் கற்பித்தலிலும், ஏனைய பாடங்களைத் தமிழில் கற்பித்தலிலும் சில திருத்தங்கள் செய்யப் பெறு தல் வேண்டும்.

பி. டி. யில் தமிழ்ப் பயிற்சி பெற்றவர்கள்.

செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் ஒன்றுமுதல் மூன்று படிவங்கள் வரை தமிழ் கற்பித்து வருவதைப் போலவே பி. ஏ. வரையிலும் தமிழ்ப் படித்து பி. டி. யிலும் தமிழ் கற்பிப்பதில் பயிற்சி பெற்ற பட்டதாரிகள் நான்கு முதல் ஆறு படிவங்கள்வரை தமிழ் கற்பிக்கலாம் என்பது நடைமுறையில் வரவேண்டும். இன்று பி. டி. யில் தமிழை விருப்பப் பாடமாக எடுத்து படித்த ஆசிரியர்களுக்கு சரியான முறையில் தமிழ் கற்பிக்கும் பணியை அளிக்காதிருப்பது வருந்தத்தக்கது.

இண்டர், பி. ஏ. தமிழ்ப் பாடத் திட்டங்கள்

இண்டர், பி. ஏ. தமிழ்ப் பாடத் திட்டங்கள் மாற்றியமைக்கப்படல் வேண்டும். தமிழ் கற்பிக்கும் நோக்கம் பல துறைகளில் விரிவடைந்திருக்கும் இன்றைய நிலையில் என்றோ என்ன நோக்கத்தைக் கொண்டோ ஆயத்தம் செய்யப்பெற்ற பாடத்திட்டங்களை இன்னும் நடைமுறையில் வைத்திருப்பது தவறு. ஆங்கில பாட திட்டத்தை விட தமிழ்ப்பாடத்திட்டம் அளவில் பெரிதாகஇருக்கவேண்டும். தேறும் வினாக்களின் எண்ணிக்கையும் அதற்கேற்றவாறு அதிகமாகவேண்டும். இன்றைய பாடத்திட்டப்படி ஆங்கில பாடத்திட்டமும் பிறதுறைகளின் பாடத்திட்டமும் தமிழ்ப் பாடத் திட்டங்களைவிட அளவில் பெரியவை. ஆங்கிலத்துக்கு இண்டரில் மூன்று வினாத் தாட்களும், பி. ஏ. க்கு நான்கு வினாத்தாட்களும் உள. அது போலவே இண்டரில் தமிழுக்கு மூன்று வினாத்தாட்களும், பி. ஏ. யில் நான்கு வினாத்தாட்களும் அமையுமாறு பாடத்திட்டமும் விரிவடைய வேண்டும்; மதிப்பு எண்களும் அதிகமாக வேண்டும்.

ஆங்கிலம் கற்பிக்கும் வாயிலாக இருந்தபோது பி. டி. யில் எல்லோரும் ஆங்கிலம் பயிற்றுவதில் பயிற்சி

பெற்றனர். தமிழ் கற்பிக்கும் வாயிலாக வந்தபிறகு தமிழில் பிற பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர் அனைவரும் பி. டி. யில் தமிழ்ப் பயிற்றும் முறைகளில் பயிற்சி பெறுதல் வேண்டும். இந்நிலை ஏற்பட்டால் பி. டி. யில் தமிழ் கற்பிக்கும் பயிற்சி விருப்ப பாடமாக அமைந்திருக்கும் நிலைவேண்டியதில்லை.

செகண்டரி கிரேட் ஆசிரியர்கள்

ஒன்று முதல் மூன்று படிவம் வரையில் தமிழ் கற்பிக்கும் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் 'வித்துவான்–பிரிலிமினரி' வரையிலுமாவது தமிழ் படித்திருந்தால்தான் தமிழ்ப் பணியை நன்முறையில் ஆற்ற முடியும். அவர்கள் பள்ளி இறுதித் தேர்வு வரை பெற்ற தமிழறிவு போதாது. மேல் படிவங்களில் பி. ஏ. வரையிலும் தமிழ்ப் படித்த பட்டதாரிகளே பிற பாடங்களை தமிழ் மொழியில் கற்பிக்க வேண்டும் என்ற விதி வகுக்கப்பட வேண்டும். நடைமுறையில் பணியாற்றி வருபவர்களுக்கு விதிவிலக்கு அளித்து புதிதாக வருபவர்க்கு விதிகள் செய்யப்பெறல் வேண்டும்.

பட்டதாரிகள் தமிழ் கற்பித்தல்.

தமிழில் பிற பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஒரு வகுப்பிற்காவது தமிழையும் கற்பிக்க வேண்டும் என்ற விதியைப் படிப்படியாகக் கொணர்ந்து இறுதியில் கட்டாய நிலை வந்துவிட வேண்டும். தாம் மொழியாசிரியராக இரா விட்டால் மொழிவளர்ச்சியில் கருத்தினைச் செலுத்தும் அக்கறை ஏற்படாது. அன்றியும் பி. ஏ. வரையிலும் ஆங்கிலம் படித்து புதிய முறைகளிலும் பயிற்சி பெற்றவர் புதிய போக்கில் தமிழைக் கற்பிக்கக் கூடுமென்றும் எதிர் பார்க்கலாம். அரசியல் மேடைகளிலும், பொது மேடைகளிலும் மாநாட்டுக் கொட்டகைகளிலும் தமிழ் உணர்ச்சி

தாண்டவமாடிய போதிலும் பட்டதாரிகளிடம் தமிழ் கற்றல், தமிழ் கற்பித்தல் ஆகிய செயல்கள் தமக்குத் தாழ்வு தரக்கூடும் என்ற தவறான கருத்து இன்றும் நிலவி வருதல் கண்கூடு. பட்டதாரிகள் தான் மேல் வகுப்புக்களுக்கு தமிழ் கற்பிக்க வேண்டும் என்ற கட்டாய நிபந்தனை ஏற்பட்டு விட்டால் இந்தத் தவறான தாழ்வுணர்ச்சி 'மெள்ளச் சாகும்.' தமிழ்பயிலுதலும், தமிழ் கற்பித்தலும் தமக்குப் பெருமையளிக்கும் செயல்கள் என்பதை அவர்கள் உணர்வார்கள்.

பி. ஏ. வரையிலும் தமிழ் படிக்காதவர்கள் தமிழில் தேர்ச்சி பெறவும் பி. ஓ. எல் வரையில் பிற பாடங்களைப் பயிலாதவர்கள் அவற்றில் தேர்ச்சி பெறவும் (அறிவியல் துறையைத் தவிர) வாய்ப்புக்கள் தரப் பெறுதல் வேண்டும். இவ்வாறு பயின்று தேர்ச்சி பெருதவர்க்கு முறையே தமிழையும், பிற பாடங்களையும் கற்பிக்கும் வாய்ப்புக்கள் அளித்தல் கூடாது.

தமிழாசிரியர் என்ற தனி வகுப்பு.

நாளடைவில் தமிழாசிரியர்கள் என்ற ஒரு தனி வகுப்பினர் உயர்நிலைப் பள்ளிகளில் இல்லாது போக வேண்டும். பிற மொழியான ஆங்கிலம் கற்பிப்பதற்கென ஒரு தனிக் கூட்டம் இல்லா திருக்கும்போது தாய்மொழியான தமிழைப் பயிற்ற ஒரு தனிக் கூட்டம் ஏன் தோன்றிற்று என்பது தெரியவில்லை. அந்நியர் ஆண்டுவந்த பொழுது தமிழுக்கு ஏற்றம் அளிக்கப்பெறவில்லை; தமிழ் பயிலும் நோக்கமும் வேறுவிதமாக இருந்தது. அக்காலத்தில் தமிழறிவு மட்டிலும் பெற்ற ஒரு சிலரை மிகக் குறைந்த ஊதியத்துக்கு நியமித்து தமிழ்ப் பணியாற்றச் செய்தனர். அன்றும் பட்டதாரிகளிடமோ பிறரிடமோ சிறிது தமிழறிவாவது இருந்திருந்தால் இத்தகைய ஒரு தனிக் கூட்டம் தோன்றி இருக்க

வாய்ப்பே இருந்திராது. இன்று தமிழ்க் கற்பிக்கும் நோக்கம் மிக விரிந்த நிலையில் உள்ளது; தமிழ்மொழி பள்ளிகளில் கற்பிக்கும் வாயிலாக அமைந்துள்ளது; கல்லூரிகளிலும் அது கற்பிக்கும் வாயிலாக அமைய வேண்டுமென்ற குரல் எம்மருங்கும் கேட்கப் பெறுகிறது. இந்நிலையில் பல கலைகளையும் அறிந்த பட்டதாரிகள் தமிழைக் கற்பிக்கும் பணியை மேற்கொள்ளுதல் தான் மிக மிகப் பொருத்தம். வடமொழி, தெலுங்கு, ஆங்கிலம் போன்ற பிற மொழிகளைப் பயிற்றுவதற்கு தனிக்கூட்டம் அவசியம் ஏற்படுதல் வேண்டும். உலக வழக்கிலில்லாத வடமொழியை அனைவரும் கற்றிருக்க முடியாது; கற்க வேண்டுமென்று வற்புறுத்தலும் கூடாது. பி. ஏ. வரையிலும் படித்த அனைவருமே ஆங்கிலத்தைக் கற்பிக்க இயலும் என்று நினைத்தலும் தவறு. இன்றைய சூழ்நிலையில் ஆங்கிலம் எவ்வாறு கற்பிக்கப் பெறுகிறது என்பதைக் கல்வி நிபுணர்கள் எண்ணிப் பார்த்தால் அதற்குத் தக்க ஆங்கில அறிவும் தனிப் பயிற்சியும் பெற்ற 'ஆங்கில ஆசிரியர்கள்' என்ற தனி வகுப்பினரைத் தோற்றுவிக்க வேண்டும் என்பதைக் கட்டாயம் உணரக் கூடும். தமிழ் நாட்டில் தெலுங்கு கன்னடம் மலையாளம் முதலிய மொழிகளைக் கற்க விரும்புபவர்களுக்கு அந்தந்த மொழியாசிரியர்களை நியமனம் செய்து அம்மொழிகளைப் பயிலுவதற்கு வாய்ப்புக்கள் தருதல் வேண்டும்.

தமிழ் கற்பிக்கும் நோக்கம்.

1948 ஆம் ஆண்டில் அமைக்கப்பெற்றுள்ள புதிய செகண்டரி தமிழ்ப் பாடத்திட்டத்தில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் தகுதிபற்றிய குறிப்பையும் இவற்றுடன் சேர்த்துப் பார்த்தால் நிலைமை ஒருவாறு நன்கு தெளிவாகும். மொழிகற்றல் கருத்து மூலமாக விரிவடைய துணை செய்ய

வேண்டும். அது போலவே பிற பாடங்களைத் தமிழ்மொழியில் கற்றல் தமிழ்மொழி வளர்ச்சிக்குத் துணைபுரிய வேண்டும். இவ்வாறு ஒன்றையொன்று தழுவி நின்று இரண்டும் வளர்தல் நோக்கமாகக் கொண்டதோர் பாட திட்டம் உருவாக்கப் பெற்றால் கல்லூரியில் தமிழ் வாயிலாகக் கற்பிக்கும் முறை வெற்றியுடன் நிறைவேறும். அப்பாடங்களைத் தமிழ் மொழியில் கற்பிக்கும் ஆசிரியர்களும் தமிழிலும் ஓரளவு தேர்ச்சியடைந்தாக வேண்டும் என்ற எல்லையையும் வரையறை செய்தால் இவ்வெற்றி இன்னும் சிறக்கும். கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களும் 'கற்பிக்கும் முறைகளில் பயிற்சிபெற வேண்டும்' என்ற கட்டாய விதியும் செய்யப் பெறல் வேண்டும். கற்பித்தல் முறை, கற்றலின் விதிகள், உளநூல் அறிவு முதலிய துறைகளில் சிறிதும் பயிற்சி பெறாத ஆசிரியர்கள் கல்லூரிகளில் பணியாற்றி வருதலை சிறிது சிறிதாக குறைத்து பி. டி. பயின்றவர்கள்தான் கல்லூரிகளிலும் பணியாற்ற தகுதியுள்ளவர்கள் என்ற விதியும் செய்யப் பெறுதல்வேண்டும். அரசாங்கமும், பல் கலைக் கழகங்களும், கல்வி நிபுணர்களும் ஒன்று கூடி ஆவன செய்ய வேண்டும். அவற்றை விரைவிலும் செய்ய வேண்டும். 'பழைய வீட்டை பழுதுபார்த்தல்' போல் பல நிலைக் கல்வித் திட்டங்களில் சிறிது சிறிதாக திருத்தங்கள் செய்வது நற்பயன் விளைக்காது. எல்லாக் கல்வித் திட்டங்களும் ஒரே காலத்தில் உருவாக வேண்டும். அவை ஒன்றையொன்று தழுவி நிற்குமாறு அமைய வேண்டும்.

தேர்தல் ஏஜண்டுகள்

முக்கியஸ்தர்

பிரிட்டனில் தேர்தல் காலத்தில் ஓயாது உழைப்பவர்கள் தேர்தல் ஏஜண்டுகள்தான். பிரபல அரசியல் கட்சிகள் முக்கிய தொகுதிகளில் நிரந்தரமாகத் தேர்தல் ஏஜண்டுகளை நியமித்துவிடுகின்றன. ஆனால் தேர்தல் காலத்தில்தான் ஏஜண்டுகளின் உழைப்பும் உற்சாகமும் பிரமிப்பூட்டும்படி இருக்கின்றன. தேர்தல் ஏஜண்டு சட்டபூர்வமான அதிகாரம் பெற்றவர்கள் சட்டத்திற்கு அடங்கி, ஒழுங்கான முறையில் தேர்தல் நடவடிக்கைகளை நடத்த வேண்டியவர் அவர். சட்டவிவகாரங்களிலும் பிரசார நிர்வாகத்திலும் அவர் நிபுணர். சுருங்கக் கூறினால், தேர்தலிலேயே அவர்தான் ஜீவநாடி.

தேர்தலுக்கு நிற்கும் அபேக்ஷகருக்குச் சட்டசம்பிரதாயங்களைக் கவனிக்க அவகாசம் இராது. வாக்காளர்களைச் சந்தித்து ஆதரவு கோரவும், தினசரி பத்துப் பன்னிரண்டு கூட்டங்களில் பேசவுமே அவருக்கு நேரம் சரியாகயிருக்கும். சிறந்த முறையில் ஒழுங்காக, தேர்தல் பிரசாரம் நடத்த அவர் விரும்பலாம். ஆனால் கட்சி விவகாரங்களையும், சர்க்காருடனுள்ள தொடர்பையும் சரிவர கவனிக்க அவருக்கு நேரமிராது.

பிரிட்டனில் தேர்தல் பிரசாரம் செய்யச் சிலகட்டுத் திட்டங்கள் உண்டு. செலவு செய்வதிலும் ஓர் எல்லையுண்டு. பிரசுரங்களை வெளியிடவும், வேறு வகைகளில் பிரசாரம்

செய்வதிலும் சில விதிகளுக்கு அடங்கியே நடக்க வேண்டும். தேர்தல் காலத்தில் சொந்தச் செலவு-(பிரசார) பிரயாணச் செலவுகளுக்காக ஓர் அபேக்ஷகர் நூறு பவுன்களுக்கு அதிகம் செலவிடக் கூடாது. இந்தச் செலவு கணக்கை, தேர்தல் முடிந்த பிறகு சர்க்காருக்கு அனுப்பவேண்டிய பொறுப்பு தேர்தல் ஏஜண்டைச் சேர்ந்தது.

அலுவல்கள்

தொகுதி பூராவும் கூட்டங்களை நடத்த ஏற்பாடு செய்வது, வீடு வீடாகச் சென்று வாக்காளர்களைச் சந்திக்க பிரசாரகர்களை நியமிப்பது, எதிர்க்கட்சிகளின் பிரசாரத்தைக் கவனித்து, தன்னுடைய அபேக்ஷகரின் வாதத்தைக் கூறுவது,எதிர்ப்பு ஏற்படக் கூடிய இடங்களைச் சமாளிப்பது, இவை எல்லாம் ஏஜண்டுகளின் அலுவல்கள் தான். ஏஜண்டுகளின் வேலையை ஜாபிதாச் செய்து விடுவது சுலபமல்ல. அவர் சாகஸமும் சாதுர்யமும் நிறைந்தவராக இருப்பதைப் பொறுத்தே அபேக்ஷகருடைய வெற்றி தோல்வி இருக்கும். பொதுவாக, பல ஏஜண்டுகள் வாசாலகர்களாக இருப்பார்கள். எதிர்க்கட்சிகளின் அறிக்கைகளுக்கு மறுப்பு விடுவதிலும் தங்களுடைய கட்சி அபேக்ஷகருடைய வாதத்தை எடுத்துக் கூறுவதிலும் திறமைசாலிகளாக இருப்பார்கள்.

தேர்தல் முடிந்ததும் கணக்குகளைச் சீர்செய்துவிட்டு அடுத்த தேர்தலுக்கு ஏற்பாடுகளைச் செய்வது பற்றிச் சிந்திக்க ஆரம்பித்து விடுவார், தேர்தல் ஏஜண்டு. இடையில் சில வருஷ காலம் இருப்பதைப் பற்றி அவருக்கு அக்கறையில்லை. அரசியல் ஞானமுள்ள மக்கள், பொதுத் தேர்தல் காலத்தில் பொறுப்புடன் நடந்து கொள்கிறார்கள். பல்வேறு கட்சியினர் அவர்களை அணுகினாலும், தம்முடைய பிரதிநிதி இன்னாராகத் தானிருக்க வேண்டுமென அவர்கள்

தீர்மானித்து விடுவார்கள். அந்தத் தெளிவு ஏற்படுவதற்கு, தேர்தல் ஏஜண்டுகளின் உழைப்பு ஓரளவுக்கு உதவுகிறது.

தேர்தலில் ஒரு கட்சி அபேக்ஷகர் வெற்றிபெற கட்சி ஊழியர்களின் உழைப்பும் ஓரளவுக்கு உதவுகிறது. தேர்தல்களுக்கிடையில் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகள் மூலம் பொது மக்களுடன் தொடர்பு கொள்கிறார்கள். அவர்களுக்குத் துணையாக நின்று, கட்சியின் சேவை மக்களுடைய மனத்தில் தேங்க, தேர்தல் ஏஜண்டு பல உத்திகளைக் கையாளுகிறார். இதனால் தேர்தல் காலத்தில் அவருடைய வேலைப்பளு குறைகிறது.

பத்திரிகைத் தொடர்பு

தேர்தல் அபேக்ஷகரை மக்களுக்கு அறிமுகப்படுத்துவதற்காகவும் தொடர்ந்து அவரைப்பற்றிக் கூறுவதற்காகவும் பத்திரிகைகளின் உதவி அவசியம். இதை நன்றாக உணர்ந்த தேர்தல் ஏஜண்டு, அபேக்ஷகர் கலந்து கொள்ளும் விழா--கூட்டங்கள் பற்றியும் சமூக நிகழ்ச்சிகள் பற்றியும் முன்னதாகவே பத்திரிகைகளுக்குத் தெரிவித்துவிட்டு, அந்த நிகழ்ச்சிகளில் அபேக்ஷகர் கலந்து கொள்ளவும் அதைப்பற்றி பத்திரிகைகளில் செய்தி வரவும் ஏற்பாடு செய்வார்.

தங்களுடைய தொகுதியிலுள்ள வயது வந்தோர் ஒவ்வொருடைய பெயரும் வாக்காளர் ஜாபிதாவில் பதிவாகியிருக்கிறதா என்று பார்ப்பதிலும் ஏஜண்டுகளுக்கு அக்கறையுண்டு. தேர்தல் காலத்தில், தம்முடைய கட்சியை ஆதரிக்கும் சொற்பொழிவாளர்களைப் பொறுக்கித் தகுந்த இடங்களில் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்வது ஏஜண்டுகளின் தனிச் சாகஸம்தான்.

புது அபேக்ஷகரை அறிமுகப் படுத்த மட்டுமே தேர்தல் ஏஜண்டு தீவிரமாக உழைக்கவேண்டுமென்பதில்லை. பார்லிமெண்டு அங்கத்தினர் ஒருவர் மீண்டும் அதே தொகுதியில் நிற்க விரும்பினாலும் ஏஜண்டின் பொறுப்பு அதிகமே. அங்கத்தினருடைய தபால்களைக்கவனித்து, மக்களுடைய குறைகள் இருந்தால் பரிகாரம் தேட முயல்வது, அந்தத் தொகுதி மக்களுக்காகவும், பொதுவாகவும் அங்கத்தினர் செய்துள்ள சேவைபற்றி மக்களுக்கு எடுத்துக் கூறி, அவர்களுடைய நல்லெண்ணத்தை வலுப்படுத்துவது என இம்மாதிரி அலுவல்களையும் அவர் செய்வார். சுருங்கக் கூறினல் பார்லிமெண்டரி அமைப்பு முறையில் தேர்தல் ஏஜண்டுக்கு முக்கிய ஸ்தானம் உண்டு. மக்களுக்கும் பாராளுமன்றத்திற்கும் அவர் ஒரு தொடர்பாக நிற்கிருர். தேர்தல் காலத்தில் அவருடைய உழைப்பு அதிகரிக்கிறது. அவர் எப்போதும் உழைப்பாளிதான்.

கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தங்கள்

தனிப்பட்டும் கூட்டுமுறையிலும் பாதுகாப்புச் செய்து கொள்ளும் உரிமை ஒவ்வொரு நாட்டுக்கும் உண்டு என்கிறது ஐக்கிய நாடுகள் சபைகளின் சாசனம். கூட்டுப் பாதுகாப்பு ஏற்பாடு இல்லாததால் தான், பல நாடுகள் ஒன்றன்பின் ஒன்ருக, ஜெர்மனி அல்லது ஜப்பான் ஆக்கிரமிப்புக்கு அடிபணிய நேரிட்டது. பிரான்ஸ், பிரிட்டன் நட்பு இருந்தும், போலந்து, ஆக்கிரமிப்பிலிருந்து தப்ப முடியவில்லை. போலந்துக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் அந்த நாடுகள் யுத்தப் பிரகடனம் செய்தன. ஆயினும் உருப்படியாக ஏதும் செய்ய முடியவில்லை. டென்மார்க், நார்வே ஹாலந்து, பெல்ஜியம் ஆகியநாடுகள் நடுநிலைமை வகித்தன. கடைசியில் அவையும் ஜெர்மன் வெறிக்கு அடிபணிந்தன.

சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்புக்கும் தகுந்த ஏற்பாட்டை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை செய்யும் வரையில் பாதுகாப்பு ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளும்உரிமை தனி நாடுகளுக்கு அவசியம் என்று ஐக்கிய நாடுகள் சபைஒப்புக் கொண்டது. சோவியத் முட்டுக்கட்டை போட்டுக்கொண்டேயிருப்பதால் பாதுகாப்புச் சபையின் இலட்சியம் கைகூடவில்லை.

செக்கோஸ்லாவாகியாவில் கம்யூனிஸ்டு ஆதிக்கம் ஏற்பட்டது. அது நேரடியான ஆக்கிரமிப்பல்ல. நாட்டைச் சுற்றிச் செஞ்சேனைகள் நின்றன. கம்யூனிஸ்டுகள் அதிகாரத்தைக் கைப்பற்றினர்கள். அதேபோல, மேற்கு பெர்லினைக் கைவசப்படுத்த கம்யூனிஸ்டுகள் திட்டமிட்டார்கள்;

மக்களைப் பட்டினி போடச் சூழ்ச்சி செய்தார்கள். ஆனால் வெற்றிபெற முடியவில்லை. விமான மூலம் உணவு அனுப்ப மேற்கு வல்லரசுகள் ஏற்பாடு செய்தன. நெருக்கடி ஏற்பட்டால் சமாளிக்கவும், மேற்கு ஜெர்மனியில் விமானங்களை நிறுத்தி வைத்தன.

தென் கொரியாமீது வட கொரியா பாய்ந்தபோதும், ஜப்பானில் அமெரிக்கப் படைத்தளம் இருந்ததால் சமாளிக்க முடிந்தது. ஆக்கிரமிப்பைச் சமாளிக்க பாதுகாப்பு முன்னணி அவசியம் என்பது, யுத்தத்திற்கு முன்பும் பின்பும் நடந்த நிகழ்ச்சிகளால் ஊர்ஜிதமாகி விட்டது. அணுச் சக்தி ஆயுதங்களும் உதவியாக உள. ஆனால், மீண்டும் போர் மூண்டால் நிலைமையை வேறுவிதமாகச் சமாளிக்க வேண்டும். சென்றயுத்தங்களில் நடந்தது போல, போர்த் துவக்கத்திற்குப் பிறகு கூட்டுச் சேர்வது சாத்தியமல்ல. அதற்கு அவகாசமேயில்லாமல் போர் மூண்டுவிடும். ஆகவே படைத்தளங்களும் படைகளும் தயாராகவேயிருக்க வேண்டும். அணுசக்தி ஆயுதங்களை எல்லா நாடுகளும்—குறிப்பாக சிறு நாடுகள்—கையாள முடியாது. ஆகவே சிறு நாடுகளுடைய பாதுகாப்புக்கு அவை பயன்படா. பெரிய வல்லரசுகளே அணுச்சக்தி ஆயுத உற்பத்தியில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதால், சிறு நாடுகள், அவற்றின் ஆதரவில்—கூட்டுப் பாதுகாப்பில்—நம்பிக்கை கொண்டு வாழவேண்டும். கூட்டுப் பாதுகாப்பினால் தனி அரசுத் தன்மை பாதிக்கப் படுமென்று வாதிக்கலாம். தனி அரசைக் காப்பாற்றவே, கூட்டுப் பாதுகாப்பும், கூட்டு ராணுவத்திடம் தளங்களை ஒப்பித்தலும் அவசியமாகிறது.

நாடோ ஸ்தாபனம், சிறு நாடுகளில் ராணுவதளம் அமைக்க முயன்ற போதெல்லாம் சோவியத் சர்க்கார் எதிர்ப்புக் குரல் எழுப்பிற்று. தனி அரசின் உரிமையைப்

பாதிக்கும் செயல் எனக் கூறிற்று. ஆனால் சம்பந்தப்பட்ட நாடுகளோ, தங்களுடைய தற்காப்பு ஏற்பாடுகளில் சோவியத் தலையிடுவதே—அபிப்பிராயம் கூறுவதே—உரிமையைப் பாதிக்கும் செயல் எனக் கூறின. இதை பிரெஞ்சு வெளி நாட்டு மந்திரி திரு. பினே சமீபத்தில் வெகு அழகாக எடுத்துக் கூறினார். ஐரோப்பாவிலுள்ள அந்நிய தளங்கள் மாற்றப்பட வேண்டும் என்று திரு. மாலடோவ் கோரியதற்கு அவர் சொன்னார்: "அந்நிய தளங்கள் இருப்பதை நான் அறியேன். அமைதி நிலவ, பொதுவாகச் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு முயற்சிகளைத்தான் நான் அறிவேன்"

ஒரு நாட்டின் சம்மதம் பெற்ற பிறகுதான், அங்கு நேச நாட்டுத் துருப்புக்கள் நிறுத்திவைக்கப் படுகின்றன. தேசியப் பாதுகாப்புக்கு அவை அவசியம் என்று சம்பந்தப்பட்ட நாடு நினைக்கிறது. நாடோ ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஒரு நாடே தன்னுடைய மண்ணில் நேச நாட்டு ராணுவத்தை நிறுத்த அனுமதி மறுக்கலாம். உதாரணமாக, டென்மார்க், 'நாடோ' ஸ்தாபனத்திற்கு உதவியாக இருக்கும்படி, தன்னுடைய தளங்களை விஸ்தரிக்கிறது, ஆனாலும் தன்னுடைய மண்ணில் நேச நாட்டுப் படைகளை நிறுத்திக் கொள்ள விரும்பவில்லை. 'நாடோ' ஸ்தாபனத்தைச் சேர்ந்த நாடுகள், பொதுத் தளங்களை அமைப்பதால் தங்களுடைய உரிமை பாதிக்கப்படும் என எண்ணவில்லை. வெளிநாடுகளில், 'நாடோ' படைகள் எப்படி எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு தெளிவான விதிகள் உள. அவை பொதுப்பாதுகாப்புக்கு உகந்தவாறும், அரசு உரிமைகளுக்குக் குந்தகமில்லாமலும், எச்சரிக்கையுடன் வகுக்கப்பட்டுள.

சம்பந்தப்பட்ட நாடுகளைக் கலந்தாலோசிக்காமல் அங்குள்ள தளங்களை உபயோகிக்க முடியாது. யுத்த அபாயத்தைத் தடுக்கும் நோக்கத்துடன் ஒரு வல்லரசு வேறு ஒரு நாட்டின் மீது போர்தொடுக்க முயலலாம். கூட்டுப் பாதுகாப்பு ஏற்பாட்டில், மற்ற நாடுகளைக் கலந்தாலோசியாமல் அங்குள்ள தளங்களை, தனி நாடு--வல்லரசு—உபயோகிக்க முடியாது. தற்கால ராணுவக் கூட்டு ஒப்பந்தங்களில் சிறு நாடுகளின் வாக்குக்கு விசேஷ மதிப்புண்டு. ஒரு வல்லரசின் செல்வாக்கை விட சிறு நாடுகளின் ஏகோபித்த கருத்தே உலக அரசியலில், வலிமை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இந்த நோக்குடன் பார்த்தால், நாடோ ஸ்தாபனத்தில் ராணுவ பலம் பெற்ற ஜெர்மனி அங்கம் வகிப்பதன் பலாபலன்கள் விளங்கும். ஆக்கிரமிப்பைத் தடுத்து, உலக அமைதி நிலவச் செய்வதே கூட்டு ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கம் என்பதை நாம் மறக்கக் கூடாது.

எங்கள் யாத்திரை

அ. பாலசுந்தரம்

எங்கள் யாத்திரை பல நாள் முயற்சி. செல்ல வேண்டிய ஊர்கள்; பார்க்கத் தக்க இடங்களைப் பற்றிய விவரம் சேகரித்தல்; வேண்டிய வசதி; ரயில்வே அதிகாரிகளின் உத்தரவு பெறுவதற்கான பிரயத்தனம் ஆகியவைகளுக்குப் பின் 4-5-55 அன்று ஒன்பது பேர் புறப்பட்டோம்.

முதலில் காட்டுப்பாடி சந்திப்பில் வண்டி ஏறினோம். அடுத்த நாள் காலை திண்டுக்கல் வழியாய்ப் பழநியை அடைந்தோம். மலையின் தோற்றம் வெகு தூரத்திலேயே அழகாய்த் தென்பட்டது. உச்சியை அடையப் படிகள் மிக நன்ருகக் கட்டப்பட்டிருக்கின்றன. இடையிடையே மண்டபங்கள் முருகன் திருவிளையாடல்களை விளக்கும் அழகிய சித்திரங்களுடன் அமைக்கப்பட்டிருக்கின்றன. மண்டபங்களின் பக்கங்களிலும் மேற்புறங்களிலும் 'கந்த ர அநுபூதி' போன்ற தோத்திர நூல்களிலுள்ள பாக்கள் முருகன் பெருமையை அன்பர்கள் அறிந்து போற்றும் வண்ணம் வரையப்பட்டுள்ளன.

படிகள் உயரமாய் அமைந்திருப்பதனுல் ஏறும்போது உடற் களைப்புத் தோன்றுகிறது. இதயம் அதிகமாய்த் துடித்து உடலில் வியர்வை வழிகிறது.

சாதாரண நாட்களிலும் நூற்றுக்கணக்கான வெளியூர் அன்பர்கள் கூட்டம் ஆலயத்திற்குச் செல்வதும் கீழே இறங்குவதும் கண்டோம். அவர்கள் பழநியாண்டவன்

பெயரை உரக்க ஒலிக்கும் பேரொலி எங்கள் உள்ளத்தைத் தொட்டுப் படியேறும் சிரமத்தை மறக்கச் செய்து, தெய்வ சிந்தனையை மேலும் தூண்டியது. நாங்களும் அவன் பெயரை உச்சரித்தோம்; அவன் புகழைப் பாடினோம்; உள்ளத்தால் வணங்கினோம்.

'படிக்கின்றிலை பழநித் திருநாமம்' எனவும், 'அதிசயம் அநேகம் உற்ற பழநிமலை' எனவும் அருணகிரிநாதர் பாடிய பாக்கள் நினைவில் தோன்றி பழநியின் சிறப்பை நினைவூட்டின. மலை உச்சியில் கோயில் கொண்ட ஆண்டவனைத் தரிசித்தோம். திருநீற்றுக் காப்புக் கொண்ட முருகனின் திருவுருவம் மிகவும் கவர்ச்சி வாய்ந்ததாக இருந்தது. அங்கு எப்போதும் அபிஷேகம் நடந்தவண்ணமாகவே இருக்கிறது. மலைப் பழமும் தேனும் சர்க்கரையும் கலந்த பஞ்சாமிர்தம் பழநியில் பேர் பெற்றது; பன்னாட்கள் கெடாமல் இருப்பது; அதற்குச் சமம் அதுவே.

திருமுருகாற்றுப்படை முதலிய சங்க இலக்கியங்களில் இத்தலம் 'திருவாவினன்குடி' என்ற பெயரால் வழங்கப்பட்டிருக்கிறது. ஆய்குடியில் தோன்றிய வள்ளல் ஒருவன் ஆட்சி செய்த இடமாதலின் அப்பெயர் பெற்றது. பழநிக்கு அண்மையில் ஆய்குடி என்ற ஊர் ஒன்று இப்போது இருத்தலும் இதற்குச் சான்றாகும். 'ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே' என்பது திருப்புகழ்.

பழநி, போகர் என்னும் சித்தர் சமாதியடைந்த இடம் எனவும் அவர் வாழ்ந்தபோது மருத்துவ நூல் முறைப்படி கூட்டுச் சரக்கினால் அங்குள்ள முருகன் திருவுருவத்தை ஆக்கி அமைத்து, பழம் தேன் முதலியவற்றால் அபிஷேகம் செய்ய வேண்டும் என்னும் முறையை ஏற்படுத்தினார் எனவும், அங்ஙனம் அபிஷேகம் செய்யப்பட்ட பஞ்சாமிர்தத்தை உண்பவர் உடல் நலமுறுவர் எனவும் சித்தர்

வரலாற்று நூல் கூறுகிறது. இம்மலைக்கு 'சித்தன் வாழ்வு' எனவும் பெயர் உண்டு; சித்தன் என்பது முருகனையே குறிக்கும் என்று கருதுவாரும் உண்டு.

அன்றிரவு தென்காசி சென்று அதிகாலையில் குற்றாலம் சென்றோம். குற்றாலம் அரிய சுகவாச ஸ்தலம். பலர் இங்கு தங்கி உடல் நலம் பெறுகின்றனர். தென்காசியிலிருந்து குற்றாலம் போகும் பாதையின் இரு மருங்கிலும் மிக உயர்ந்த மரங்களும், மரங்களைப் பின்னிப் பிரியாது பிணைந்திருக்கும் கொடிகளின் பெருக்கமும் வழிச்செல்வோர் கதிரவன் வெம்மையைச் சிறிதும் உணராத வண்ணம் அணி நிழல் செய்கின்றன.

மலை அருகே நீண்டு உயர்ந்த எத்தனையோ வகையான மரங்கள் இருக்கின்றன. பலவேறு நிறங்கள் கொண்ட மலர்கள் பூத்து நறுமணம் கமழ்ந்து குலுங்கிக் காட்சியளிக்கின்றன. வண்டுகளின் ரீங்காரம் கேட்டுக்கொண்டேயிருக்கிறது. நூற்றுக் கணக்கான காய்கள், மத்தளம் தொங்கவிட்டது போல காய்த்துப் பழுத்து மணம் வீசும் பலா மரங்களின் தோற்றம் எங்களுக்கு வியப்பையளித்தது. குலைகுலையான காய்களையுடைய பாக்கு மரங்கள் நாங்கள் முன்பின் காணாத அரிய காட்சி.

இங்குள்ள மலை 'திரிகூட மலை' எனப்படும். மலை உச்சியிற் பெருகும் அருவி பெரிய பள்ளத்தே வீழ்ந்து புரண்டு சுழன்று நுரைத்துப் பொங்கி மேலே வழிந்தோடுகிறது. அந்த இடத்துக்குப் 'பொங்கு மாங்கடல்' என்று பெயர். அவ்விடத்திலிருந்து முந்நூறு அடி மலைச் சரிவில் பேரிரைச்சலுடன் வழிகின்றது. நாங்கள் சென்ற சமயத்தில் அதிகமாய் நீர் வழியவில்லை. இவ் வருவிக்கு 'சண்பக அருவி' என்று பெயர். இவ் வருவியில் ஆடவரும் பெண்டிரும் சிறுரும் நீராடி இன்பம் எய்துகின்றனர்.

அருவியின் அருகே சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய குற்றாலநாதர் ஆலயம் இருக்கின்றது. இத்தல விருக்ஷம் பலா மரம். அகத்திய முனிவர் இவ் வருவியில் நீராடி சிவபூசை செய்ய எண்ணி ஆலயத்தை அடைந்தார். ஆலயத்தில் திருமாலின் உயர்ந்தோங்கிய உருவமே கண்டார். தன் கையால் அவ்வுருவத்தைத் தொட்டழுத்திச் சிவலிங்க வடிவாக்கிப் பூசை முடித்தனர் என்பது தல புராண வரலாறு. இப் புராணத்தை இயற்றியவர் மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயர் என்னும் புலவர்.

குற்றாலக் குறவஞ்சி என்னும் நூல் இவ்வாசிரியரால் இயற்றப்பட்டதே. நடனக்கலை வல்லுநர் இக்குறவஞ்சிப் பாடல்களுக்கு அபிநயம் பிடித்தாடுதலை நாம் கண்டு மகிழ்கின்றோம்.

தென்காசியில் உணவு விடுதியில் உணவு கொண்டோம். சோற்றின் நிறமும் அளவும் ஈச்சங்காயை நினைவு படுத்தின. குழம்பைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. உணவு விடுதியிலிருந்து விரைந்து விடை பெற்றோம். திருவாங்கூருக்குப் புறப்பட்டோம்.

நாங்கள் ஏறிய புகை வண்டி மலைப் பகுதியிலும், பாறைகளைக் குடைந்தமைத்த இருள் வழியிலும் மெல்ல நகர்ந்தது. இரு புறமும் அமைந்த இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ மெல்ல நகர்ந்தது துணையாயிற்று. அங்கிருந்த இயற்கை இன்ப அழகு இயற்கை யன்னையின் திருவோலக்கம் கொண்டிருத்தல் போன்று பேரின்பம் அளித்தது.

புகைவண்டிப் பாதையின் இரு மருங்கிலும் உயரமான மலைகள் காணப்படுகின்றன. வளைந்து நெளிந்து தாழ்ந்து உயர்ந்து செல்லும் புகைவண்டியிலிருந்த எங்களுக்கு, எங்கும் நிறைந்த இயற்கையழகு கண்களுக்கு விருந்தளித்த வண்ணமிருந்தது. வானளாவிய பல வகைப்

பெயர் அறியாத மரங்களும், தென்னை, வாழை, மா, பலா முதலிய மரங்களும் மலைச் சரிவுகளில் அணியணி யாக நிற்கின்றன. மூங்கில் மரங்களின் தோற்றம் வான ஏணி போற் காட்சியளித்தது. மலைச் சரிவுகள் சிற்சில இடங்களில் செப்பம் செய்யப்பட்டுப் பயிர் செய்யப்படு கின்றன. சிறுசிறு குடில்கள் ஆங்காங்கு காணப்படுகின் றன. உழைத்து இயற்கை வாழ்வில் தோய்ந்து இன்பம் காணும் ஆடவரும் மகளிரும் சின்னஞ்சிறு குழந்தைகளும் அக் குடில்களில் வாழ்கின்றனர். கட்டமைந்த உடலும் கரு விழிகளும் அவர்களின் உடலுழைப்பைக் காட்டுகின் றன. மலைகளிலிருந்து சலசல என்னும் ஒலியுடன் வழியும் சிற்றருவியே அவர்கட்கு நன்னீர். செயற்கை நாகரிகத்தை யும் விஞ்ஞானப் புதுமைகளையும் அவர்கள் கேட்டுத்தான் அறிவார்கள் போலும்!

அம்மக்கள் மலைச்சரிவைப் பண்படுத்தி உழைத்து வேளாண்மை செய்கின்றனர். சிற்சில இடங்களில் நெற் பயிரும் விளைகின்றது. ஏர் உழுதற்கு மாடுகளே இல்லை. காம்பு நீண்ட மண் வெட்டியே அவர்கட்கு ஏர். வற்றாது வழிந்தோடும் அருவியே பயிர் செய்தற்கு நீர். சிறூர்களும் வேலை செய்கின்றனர். பல மைல்களுக்கப்பால் ஒன்றிரண்டு தொடக்கப் பள்ளிகள் அவர்கட்கென அமைக்கப்பட்டுள் ளன. தொலைவிலிருந்து வந்து கல்வி கற்ற இளஞ் சிறூர்கள் மாலையில் தங்கள் குடில்களை நோக்கி விரைந்து செல்கின் றூர்கள்.

திருவாங்கூர் நகரத்தை மாலையில் வந்தடைந்தோம். அழகிய நகரம் அது. மிகவும் தூய்மையுடன் விளங்கு கின்றது. வாணிபம் அங்கு அதிகம். யானைத் தந்தங்களி னல் அழகிய வேலைப்பாடுகள் கொண்ட பொருள்கள் அங்குச் செய்யப்படுகின்றன. சென்னையிலுள்ளது

போன்ற உயர்ந்த வியாபார நிலையங்கள் பல உள்ளன. அங்குள்ள வியாபாரிகள் வெளியிலிருந்து வருபவர்களிடம் நம்பிக்கை கொள்வதில்லை. நகரத்தின் உட்பகுதிக்குச் செல்ல பஸ் வசதிகள் உண்டு. எனினும் அந்த ராஜ்யத்தில் பஸ் கட்டணம் மிகவும் அதிகம் என்றே சொல்லலாம்.

தேங்காய் எண்ணெயால் சமைக்கப்படும் உணவுப் பழக்கம் இல்லாதவர்களுக்குத் திருவாங்கூரில் உணவு வசதிக் குறைவென்றே சொல்ல வேண்டும். உணவு விடுதியில் தங்கியிருந்த எங்களுக்குத் தேங்கா யெண்ணெயின் தீய்ச்சல் துர்நாற்றமாக இருந்தது.

திருவாங்கூர் ஜனத்தொகையில் நூற்றுக்குத் தொண்ணூறு சத விகிதத்தினர் படித்தவர்கள். ஆடவர்களை விட அதிகம் படித்தவர்கள் பெண்களே. இந்த நிலை இந்தியா தேசம் முழுவதிலும் வருங்காலம் என்றோ என்று எண்ணமிட்டோம்.

இங்குள்ள பத்மநாபர் ஆலயம் சிற்ப ஓவியக் கலையழகு இல்லாததாயினும் தூய்மை நிறைந்தது. இத்தகைய ஆலயத்தை நாங்கள் எங்கள் யாத்திரையில் எங்கும் காணவில்லை. அதிகாலையில் நீர் மூழ்கி, நெற்றியில் நீறணிந்து, கோயிலின் தரைப் பகுதிகளைத் திருவலகால் தூய்மைப் படுத்தும் பணிமகளிர் தோற்றமும், வேத ஒலி முழக்கும் அந்தணர் குழாமும், வழிபாடு செய்ய வரும் அன்பர் திருக் கூட்டமும் எங்களை வியப்பில் ஆழ்த்தின. இத்தகைய புறச் சூழ்நிலைகளினால் எத்தகையவர் உள்ளத்திலும் தெய்வீக உணர்வு அரும்பி அலரும் என்பது திண்ணம். இவ்வாலயத்துக்குத் திருவாங்கூர் அரசர் தினந் தோறும் வந்து வழிபாடு செய்தல் வழக்கம் என அறிந்தோம்.

இங்குள்ள மிருகக் காட்சிச்சாலை இயற்கை அழகு நிரம்பிய இடம். ஒவ்வொரு மிருகத்தையும் அதன் வாழ்க்கைக்கேற்ற புறச் சூழ்நிலைகளை அமைத்துக் காப்பாற்றுகின்றார்கள். இவ்விடம் மனோரம்மியமாக இருக்கிறது. பல வகையான மிருகங்களும் பறவைகளும் காணத்தக்கன.

ஓவியக் கலைத் திறனால் அழியாப் புகழ் பெற்ற ரவி வர்மா என்னும் கலைஞன் வர்ண ஜாலங்களைக் கூட்டிக் குழைத்துத் தூரிகையால் அநாயாசமாகத் தீட்டிய அதியற்புத ஓவியங்கள் இன்றும் புதியனவாய் உயிர் உள்ளன போன்றே காட்சியளிக்கின்றன. அவன் தீட்டிய இயற்கைக் காட்சி ஓவியங்களின் முன் சிருஷ்டியற்புதங்களும் புறங்காட்டும்.

அக்வேரியம்-மீன் காட்சிச்சாலை ஒன்று கடற்கரைக்கு அண்மையில் அமைக்கப்பட்டிருக்கின்றது. நாங்கள் கேள்விப்பட்ட அத்துணை அளவு நாங்கள் காணவில்லை. சிற்சில பகுதிகள் கட்டப்படுகின்றன.

அடுத்தது குமரிமுனை. இது திருவாங்கூரிலிருந்து ஐம்பத்திரண்டு மைல் தொலைவு உள்ளது. மோட்டார்களைத் தவிர வேறு பிரயாண வசதி இல்லை. பாதை வளைவும் சரிவும் உள்ளதாயினும் அழகானது. பஸ் வேகமாய்ச் செல்ல முடியாது.

குமரிமுனையில் நடுப்பகலில் அவ்வளவாய் மக்கள் கூட்டம் இல்லை. நான்கு மணிக்கு மேல் ஆயிரக்கணக்கான மக்கள் பஸ் மூலமாயும் சொந்தக் கார்களிலும் வந்து குவிந்துவிடுகின்றார்கள். கடலலைகள் ஓயாது பெருமுழக்குடன் வீசிக் கொண்டிருத்தலினால் மாலை நேரம் மிக இன்பம் தருகின்றது. கடற்கரையில் இரவு நெடுநேரம் வரை மக்கள் கூட்டம் நிறைந்திருக்கிறது. அவ்வூரில்

மின் விளக்குகள் போடப்பட்டிருப்பினும் கடற்கரைப் பகுதியில் போதிய வெளிச்சம் இல்லை.

கடலருகே அமைந்த குமரித் தெய்வத் திருக் கோயில் சிறியதேயெனினும் மிகவும் அழகு வாய்ந்தது. குமரி யன்னையின் திருவுருவக் காட்சி எத்தகையவர் உள்ளத்தை யும் ஈர்க்கும் தன்மையது. தமிழகத்தின் தென் எல்லையில் உள்ள அப்பராசக்தியைப் போற்றிப் பணிந்து வழிபா டாற்றினோம்.

திருக்கோயிலுக்குத் தென் கிழக்குப் பக்கத்தில் கடல் அலையின் நடுவண் சிறிது தூரத்தில் ஒரு பெரிய பாறை இருக்கிறது. நீந்திச் சென்றால்தான் அப் பாறையை அடைய முடியும். விவேகானந்தர் அங்கிருந்த சமயத்தில் அப்பாறைக்கு நீந்திச் சென்று அதன்மீதிருந்து யோகம் செய்தாராம். அதனால் அப்பாறைக்கு 'விவேகானந்தர் பாறை' என்று பெயரிட்டு வழங்குகின்றார்கள்.

கன்னியாகுமரிக்குச் செல்லும் யாத்ரிகர்கள் நல்ல—தூய சுவையுள்ள உணவையோ--தாகம் தணிக்கும் நீரையோ சிறிதும் எதிர்பார்த்தல் கூடாது. கோடைக் காலத்தில் விடாய் தணிக்க முடியவேயில்லை. கடைகளில் சுவையற்ற, வதங்கி உலர்ந்த வாழைப் பழங்களைத் தவிர வேறு உணவுப் பொருள்களைக் காணுதல் அரிது. உணவு விடுதி உண்டு. விரலை வைத்தால் உள்ளே போகும் குண்டு களால் மூடப்பட்ட சோடாவின் விலை மூன்றே அணுதான். வேர்க்கடலைக் காய்களை அணுவுக்கு அறுபது என எண்ணி விற்கும் விசித்திர வாணிகம் அங்கு நடைபெறுகிறது. யாத் திரையின் பொருட்டு மக்கள் கூட்டம் வந்த வண்ண மாகவேயிருக்கும் அந்த இடத்திற்கு நல்ல குடி தண்ணீர் வசதியை அரசாங்கம் செய்யாதிருப்பது மிகவும் வருந்தத் தக்கதாகும். அன்று இரவு தங்கிப் பஸ்மூலம் திருநெல் வேலியை அடைந்தோம்.

திருநெல்வேலி நகரத்தைத் தாமிரவருணியாறு இரண்டு பிரிவாகப் பிரிக்கிறது. நதியில் நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. அந்தப் பெருக்கில் மூழ்கித் திளைத்து உடம்பைத் தூய்மை செய்து களைப்பைப் போக்கினோம். அகன்ற பெருந் தெருக்களின் இடையில் நெல்லையப்பர் ஆலயம் அமைந் திருக்கிறது. ஆலய மகா மண்டபத்தின் முன்புறத்தில் தேர்க்கால்கள் போன்று கம்பங்கள் அமைக்கப்பட்டிருக் கின்றன. அவற்றின் அடி நடு மேற்பகுதிகளில் கனமான பொருள் ஒன்றால் தட்டினால் சப்தசுரங்களும் அவற்றின் பேதங்களும் சுத்தமாய் ஒலிக்கும் அற்புதத்தைக் கேட்டு மகிழ்ந்தோம். இத்தகைய அரிய கலைத்திறன் அமைப்பு தமிழ் நாட்டிலன்றி வேறெங்கும் இல்லை யென்பதறிந்து பெருமிதம் அடைந்தோம். சிற்பக் கலைத் திறனும் இசைக் கலை நுட்பமும் ஒருங்குணர்ந்து அவற்றைக் கல்லில் அமைத்துத் தந்து அழியாப் புகழை நிலைநாட்டிய சிற்பியின் பேராற்றலை வியந்து பாராட்டினோம், நெல்லையப்பரை வணங்கி வழிபாடு செய்து திருச்செந்தூரை அடைந்தோம்.

இத் தலம் திருநெல்வேலியிலிருந்து முப்பது மைல் தூரத்தில் கடற்கரையில் உள்ளது. வழி முழுவதும் உடை மரக் காடுகளே உள்ளன. ஆழ்வார் திருநகரி ஸ்ரீவைகுண் டம் முதலிய இடங்கள் வழியில் இருக்கின்றன. திருச்செந் தூர் ஆலயம் கடல் அலைகள் மதிற்புறத்தில் மோதும் வண் ணம் அமைந்திருப்பதால் 'திருச்சீரலைவாய்' என்ற பெயரும் உண்டு. முருகன் ஆறு படைவீடுகளில் இதுவும் ஒன்று.

ஆலயம் சிறியதேயாயினும் கோபுரமும் உள்ளமைப் பும் கவர்ச்சி வாய்ந்தவை. முருகன் திருவிளையாடல்களை விளக்கும் பல திறவண்ண ஓவியங்கள் எழிலுறத் தீட்டப் பட்டுள்ளன. மூலத்தானத் திருவுருவம் அடியார்கள் உள் ளத்தினின்றும் என்றும் அகலாப் பெருங் காட்சி வாய்ந்தது.

நக்கீரர் முருகாற்றுப் படையில் ஆறு முகங்களையும் பன்னிரு கரங்களையும் சிறப்பித்துப் பாடியிருக்கின்றார்.

யாத்திரிகர்கள் தங்குவதற்காக ஆலய நிர்வாகிகளால் அமைக்கப்பட்டுள்ள விடுதி, வசதிகள் நிறைந்தது. யாத்ரிகர் எந்த நேரத்திலும் வந்த வண்ணமாகவே யிருக்கின்றார்கள். முருகப் பெருமான் உலாவரும் நாற்புறங்களிலும் கற்றூண் அமைந்த நீண்ட மண்டப வழி எங்குமில்லாத ஒரு புதிய அமைப்பு. ஆலயத்தருகில் கடலோரத்தில் 'நாழிக் கிணறு' என்னும் தீர்த்தம் இருக்கிறது. அது, பெரிய கிணற்றின் உள்ளே ஒரு புறத்தில் நாழியளவே சுற்றளவுள்ளது. அதில் உப்பு இல்லாத நீர் எடுக்க எடுக்கக் குறையாமல் இருக்கிறது. "கடல் அருகே சிற்றூறல் உண்ணீரும் ஆகிவிடும்" என்ற ஆன்றோர் வாக்கியம் இங்கு உண்மையாக இருக்கின்றது.

ஸ்ரீ வைகுண்டம் என்னும் திருக்கயிலாயபுரத்தில் பிறந்து ஐந்து வயது வரை ஊமையாயிருந்து இங்கெழுந்தருளியுள்ள முருகன் அருளால் பேசும் திறம் பெற்ற 'குமர குருபரர்' என்னும் சிறிய பெருந்தகையார் 'கந்தர்கலி வெண்பா' என்னும் அருள் திரு நூலை முதற் கண் இயற்றிய இடம் இதுவே. இந்தக் குமரகுருபரரே திருப்பனந்தாள் ஆதீனத்தை ஏற்படுத்தியவர். திருமலைநாய்க்கரால் அளிக்கப்பட்ட பெரும்பொருளால் காசியிலும் மடம் ஒன்றை அமைத்தார். அது 'குமாரசாமி மடம்' என்ற பெயருடையது. பல அறங்கள் அங்கும் நடைபெறுகின்றன.

'திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்' என்பது சொற்சுவை பொருட்சுவை நிறைந்த நூல். பகழிக் கூத்தர் என்ற வைணவப் பெரும் புலவர் தமக்கு இருந்த கடுஞ்சூலை நோய் முருகன் அருளால் நீங்கப் பெற்று இந் நூலை இயற்றினர் என்பது வரலாறு.

திருச்செந்தூர் மிகப் பெரியது. உயர் நிலைப்பள்ளி ஒன்று இங்கு இருக்கின்றது. ஊரின் மேற்குப் பகுதியில் பெரிய ஏரி ஒன்று இருக்கிறது. கடைவீதி அகன்று நீளமாயிருக்கின்றது. நீர் நிலவளம் கொண்டது. கிணறுகளில் கையில் எட்டி முகக்கும் அளவில் நீர் இருக்கிறது. பனை ஓலையால் செய்த கூடைகளில் கயிற்றைக் கட்டிப் பெண்கள் அனைவரும் நீர் மொள்ளும் காட்சி எங்களுக்கு வியப்பாய் இருந்தது.

இத் தலத்தில் அர்த்தசாம பூஜை முடிவில் தினந்தோறும் கணக்கர் ஒருவர் ஆலயத்திற்குச் செலவான பொருள்கள் விவரங்களை முருகப்பெருமான் எதிரில் படித்து அங்கீகாரம் பெறும் ஐதிகம் ஒன்று நடக்கிறது. வேறு எங்கும் இவ் வண்ணம் நடப்பதாய்த் தெரியவில்லை. அத்தலத்து முருகப் பெருமானை உளமாரப் போற்றிப் பணிந்து திருநெல்வேலி வழியாக மதுரை யடைந்தோம்.

மதுரை மிகப் பழமையும் பெருமையும் வாய்ந்த நகரம். "மாடமலி மதுரை" என நகரச் சிறப்பையும், "திருவீற்றிருந்த தீதுதீர் நியமம்" என, செல்வ வளம் கொழித்து திருமகள் கொலு வீற்றிருந்தாற் போன்று இன்பக் காட்சி வழங்கும் கடைவீதியையும் பற்றி ஆயிரத்தெண்ணூறு யாண்டுகளுக்கு முன் பாடப்பட்ட மொழிகள் பொய்யா மொழிகளே.

பாண்டிய நாட்டின் தலை நகராய் விளங்கிய இந் நகரம் தமிழகத்தின் பண்டைச் சிறப்புக்களுக்கெல்லாம் எடுத்துக் காட்டாய் இலங்குகிறது.

தமிழ் நாட்டையாண்ட முடியுடை வேந்தராம் சேர சோழர் கொலுவீற்றிருந்த தலை நகரங்கள் அனைத்தும் அழிந்தொழிய, எழில் நலமாட்சி சிறிதும் குன்றாது இன்றும் சிறந்து விளங்கும் நகரம் இஃதொன்றே.

நகரத்தின் நடுவில் ஸ்ரீ மீனுட்சியம்மையின் ஆலயம் உன்னதமான பல்வகைக் கலைக் காட்சிகளுடன் இலங்குகிறது. தென்னுட்டில் உள்ள ஆலயங்கள் அனைத்தினும், பழைமையும் பெருமையும் ஒருங்கே பெற்றது இவ்வாலயம். வரலாற்றிற் புகழ்ந்து பேசப்படும் பொற்ருமரைத் திருக்குளம் ஆலயத்துள் இருக்கின்றது. பொன்னுல் செய்யப்பட்ட தாமரை மலர் ஒன்று இப்போதும் மிதந்து பண்டை நிகழ்ச்சியை நினைப்பூட்டுகிறது.

சைவமும் தமிழும் தழைத்தினிதிருக்கும் மங்கலப் பாண்டி வளநாடு என்னும் புகழுரை பொய்யாவண்ணம் திருக்கோயிலில் மாலை வழிபாட்டின் பொருட்டு வந்து கூடும் அன்பர் கூட்டம் அளவு மிக்கது. கால வேகத்தால் மக்கள் உள்ளத்தில் கருத்து வேறுபாடு ஆங்காங்கு தோன்றினும் இங்கு பக்தியுணர்ச்சி குறையாது பெருகுதல் இந்நகருக்குள்ள தனிச் சிறப்பாகும். இங்குள்ள புது மண்டபம் காலத்தால் பழைமையதாயினும் பொருட்காட்சியால் புது மண்டபமே.

பாண்டியராட்சிக்குப் பின் எத்தனையோ மன்னர்கள் மதுரையை ஆண்டார்கள். அவரனைவரும் மீனுட்சியம்மையின் ஆலயத்தைப் பல வகையிலும் மேம்படச் செய்தார்கள். விஜயநகர அரசர் ஆட்சியில் மதுரையைப் பரிபாலித்த நாயக்க மன்னர்களும் அத்தகையவர்களே. திருமலை நாயக்கர் ஆட்சிச் சிறப்பை எடுத்துக் காட்டும் உயர்ந்த சின்னம் அவர் கட்டிய அரண்மனையே. வானுற ஓங்கிய அவ்வழகிய மாளிகை கட்டி முந்நூறு வருஷங்களாயினும், இன்றும் புதுமைப் பொலிவு அதன் கண் விளங்குகிறது. அவ்வுயர்ந்த கட்டிடத்தில் ஒரு சிறுமரமேனும் இல்லாதிருத்தல் ஒரு தனிச் சிறப்பு. அம்மாளிகையைச் சென்று காணும் மக்கள் அதன் அழகைக் கண்டு போற்ருமல், தாம்பூல எச்

சில வெண்மையான சுவர்களில் உமிழ்ந்து செந்நிறமாக்கி அதன் அழகைக் கெடுக்கின்றார்கள். அரசாங்கக் காரியாலயங்கள் பல ஆங்கிருந்த போதிலும், வருவோர் செய்யும் அடாத செயலைத் தடுப்பவர் எவருமிலர்.

இந்த நகர் தெப்பக்குளம் மிகப் பெரியது. அதன் நடுவில் உள்ள நீராழி மண்டபத்தில் அழகிய சோலையும் ஆலயமும் இருக்கின்றன. அம் மண்டபத்திற்குப் படகின் மூலம் தான் செல்லமுடியும்.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த பாலவனத்தம் ஜமீன்தார் பாண்டித்துரைத் தேவரவர்களால், தமிழ் வளர்ச்சியின் பொருட்டு அமைக்கப்பட்ட தமிழ்ச் சங்கம் பண்டைத் தமிழ்ச் சங்கத்தை நினைப்பூட்டுகின்றது. அங்குத் தமிழராய்ச்சியோ தமிழைப் பயில்வாரைப் பெருக்கும் தொண்டுகளோ நடைபெறுவதாய்த் தெரியவில்லை. 'செந்தமிழ்' என்னும் திங்கள் இதழ் ஒன்று வெளியாகிறது. 'தமிழ் வாழ்க' வளர்க என்று வாய் முழக்கம் செய்யும் தமிழ் அன்பர்கள் தமிழ் வளர்ச்சிக்கான தொண்டுகளை மேற்கொள்ள விரைந்து முற்படுவார்களாக.

மதுரை மாநகரில் வாணிபப் பெருக்கு மிகுதி. பஞ்சாலைகள் பல உள்ளன. ஆடை நெய்தலுக்குப் பேர்பெற்ற இடம். வேறு பல வியாபாரங்களும் நடைபெறுகின்றன. கல்லூரிகள் பல உண்டு. இங்கிருந்து நாங்கள் திருமாலிருஞ்சோலைமலைக்குச் சென்றோம்.

திருமாலிருஞ்சோலைமலை கள்ளழகர் கோயில் எனவும் சொல்லப்படும். இது மதுரைக்குக் கிழக்கே பதினான்கு மைல் தொலைவில் இருக்கிறது. பஸ் போக்கு வரவு உண்டெனினும் போதிய வசதி இல்லை. அங்கு மலையும் ஆலயமும், ஆலயப் பணிசெய்வோர் வீடுகளும் தவிர ஊர்கள்

அண்மையில் இல்லை. மலையடிவாரத்தில் ஆலயம் அமைந் திருக்கிறது. இத்தலத்தின் பழமையான பெயர் "பழமுதிர் சோலை" என்று திருமுகாற்றுப் படையினுல் அறியலாம். இங்கு மலையிலிருந்து பேரருவி ஒன்று வழிகின்றது.

திருவிளையாடற் புராணம் "மதுரையான படலத்தில்" இம்மலை ரிஷபகிரி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. முரு கனுக்குரிய ஆறுபடை வீடுகளில் இறுதியாகப் பாடப்பட் டுள்ள தலம் இதுவே. குறிஞ்சி நிலத்தில் இத்தலம் அமைந் திருத்தலினுலும் "குறமாதர்கள் பண்குறிஞ்சிப் பாடுவொலி பாடியாடுவார்" என நாலாயிரப் பிரபந்தப் பாடலில் இத் தலத்தில் குறவம் வழிபாடு செய்தல் கூறியிருத்தலினுலும் முருகனுக்குரிய தலமாகவே கருத இடமுண்டு.

மூலத்தானத் திருவுருவம் ஒரே பீடத்தில் இருதேவி யருடன் இருத்தலும், முருகனுக்குரிய 'அழகர்' என்ற பெயர் இருத்தலும் இவ்வாலயம் 'சோமசுந்தர விமானம்' என்று திருவிளையாடற் புராணம் குறிப்பிடுவதனுலும், இத் தலத்துக் காவல் தெய்வமாய் முருகன் படைத்தலைவரான வீரவாகு தேவர் இருத்தலும், பதினெட்டாம் படிக் கருப் பண்ணசாமி உருவம் இங்கு இருப்பதும் இது முருகன் திருத்தலம் என்பதற்குப் போதிய சான்றுகளாம்.

பின்னர் வைணவ அன்பர்கள் வழிபடும் தலமாகித் திருமாலிருஞ்சோலைமலை என்ற பெயருடன் நம்மாழ்வார் பெரியாழ்வார் முதலிய மெய்யடியார்களால் பாடப்பட்டது. நூற்றெட்டுத் திவ்ய தேசங்களில் ஒன்ருக அழகர் என்ற பெயர் கொண்ட திருமாலாக மக்கள் இப்போது வழிபாடு செய்கின்ருர்கள்.

"புனத்தினைக் கிள்ளிப் புதுவவி காட்டி பொன்னடி வாழ்க என்று இனக்குறவர் புதியதுண்ணும் எழில் மாலி ருஞ் சோலை எந்தாய்" என்ற நாலாயிரத் திருப்பாட்டு இத்

தலத்தைப் பற்றி வருவது; இதன் கண்ணும் குறிஞ்சி நில மக்கள் செயல்கள் குறித்திருத்தல் சிந்திக்கத்தக்கது.

இக் காரணங்களால் ஆதியில் குறிஞ்சி நிலத்தில் முருகன் திருத்தலமாய் நக்கீரர் முதலிய பொய்யடிமையில்லாத புலவர்களால் பாடப்பட்ட பழமுதிர்சோலை என்னும் தலம் பிற்காலத்தில் திருமாலுக்குரியதாய் வைணவ அன்பர்களாலும் பாடப்பட்டுத் திருமாலிருஞ்சோலை என வழங்கலாயிற்று. ஆகவே இத்தல மூர்த்தி முருகனும், திருமாலாயும் விளங்குகின்றார்.

சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்த பாலசுப்பிரமணிய கவிராயர் இயற்றிய பழநித்தலபுராணத்துக் கிரிச் சருக்கத்தில் வரும்.

கண்ணோராயிர மேற் கொண்டு காண்பரிதாம் என்
அண்ணல் தாரையிலுதித்த கண்ணிரண்டுடையான்
விண்ணுருத கார் மேனியன் வீற்றிருப்பது பூந்
தண்ணருவுமிழ் பழமுதிர் சோலை வேதண்டம்.

என்னும் செய்யுளும் இதனை வலியுறுத்துவதாகும்.

இரு பேருருவமும் ஒருங்கமைந்து அருள் பாலிக்கும் மூர்த்தியைத் தரிசித்து மதுரையை அடைந்து மாலை திருப்பரங்குன்றத்தைச் சேர்ந்தோம். இத்தலம் மதுரைக்கு மேற்கில் ஐந்து மைல் தொலைவில் இருக்கிறது. மதுரையிலிருந்து பஸ் போக்குவரவு அதிகமாய் உண்டு. இத்தலம் திருமுருகாற்றுப் படையில் முதற் கண்வைத்துப் பாடப்பட்ட பெருமை சான்றது.

நக்கீரர் திருமுருகாற்றுப்படை பாடியதற்குக் காரணம் இத்தல புராணம் ஒரு வகையாகவும் காளத்தி புராணம் வேறு வகையாகவும் கூறுகின்றன. ஆலயத்தின் முன்பக்கம் கட்டப்பட்டுள்ள மண்டபம் பிற்காலத்தது. படிகளின் மேல் உயரமாய் ஏறிச் சென்று ஆலய உட்பகுதியை

அடைதல் வேண்டும், மூலத்தானத் திருச்சிலை பாறையிலேயே வரைந்து செதுக்கப்பட்டுப் பாறையுடன் சேர்ந்தே யிருக்கிறது. நாடோறும் இச் சிலைக்கு நீராட்டு நடத்தல் இல்லை. ஆண்டுக்கு இருமுறை சாம்பராணித் தைலம் பூசப் படுகின்றது. பிருதிவி வடிவமாய் முருகன் எழுந்தளியிருக் கின்றான் என்ற ஐதிகம் போலும்!

இம் மலை 'கந்தமாதனம்' என்று திருப்பரங்கிரிப் புராணம் கூறுகின்றது. பரிபாடலும், முருகாற்றுப் படையும் திருப்பரங்குன்றச் சிறப்பை வியந்தோதுதல் அறிஞர் அறிந் தது. இம்மலை முகட்டில் வேலாயுத மூர்த்தி உருவமும் சுனையும், முகம்மதிய ஞானி ஒருவர் சமாதியும் இருக்கின்றன. முகம்மதியர்கள் இம்மலையைச் சிக்கந்தர் மலை என்று கூறுகின்றார்கள்.

இங்கிருந்து இராமேஸ்வரம் சென்றோம். இது நாற்புறமும் கடல் சூழ்ந்த ஒரு தீவு. கடற் பாலத்தைக் கடந்து புகை வண்டி செல்கின்றது. கடற்கரை யோரத்திலேயே வீதிகள் உள்ளன. எவ்வகைத் தொழிலும் நடைபெற வசதி இங்கு இல்லை. அங்குள்ளவர்களில் பலர் ஆலயத்தை எதிர்பார்ப்பவர்களே. ஆலயம் மிகவும்பெரியது. பிராகாரம் கண்டு மகிழத்தக்க பெருவனப்பு வாய்ந்தது. கோயிலின் உட்பகுதிகள் சில இடிந்துள்ளன. சில சமீபத்தில் புதுப் பிக்கப்பட்டிருக்கின்றன. மின்சாரம் ஆலயத்தினுள்ளேயே யந்திரத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றது. பல வகையான தீர்த்தங்கள் உள்ளன. கோடி தீர்த்தம் மிகப் பிரசித்தி பெற்றது.

இராமரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதனால் இங்குள்ள இறைவனுக்கு இராமலிங்கம் என்று பெயர் வந்தது. இராவணனதியரைக் கொன்றபின் கழுவாயாக இறைவனை அமைத்துப் பூசித்தார் இராமர் என்பது தல வரலாறு.

நாங்கள் வழிபாடு முடித்து பிராகார மேடைகளில் உள்ள பல கடைகளைக் கண்டோம். அக்கடைகளில் ஓலை பிரம்பு முதலியவற்றால் செய்யப்பட்ட பலவகைப் பொருள்களைக் கண்டோம்.

மற்றொரு பகுதியில் கடல்படு பொருள்களாகிய சங்கு, சிப்பி சோழி முலிய எத்தனையோ வகைப் பொருள்கள் குவியல் குவியலாய்க் காட்சி தருகின்றன. அவற்றின் வடிவும் நிறமும் அழகும் அமைப்பும் சொற்களால் எழுத முடியாது. ஓவியக் கலைவல்லுநராலும் வரைய முடியாத அத்துணைப் பேரழகும் அமைப்பும் கொண்ட அப்பொருள்கள் அவ்விடத்திலன்றி வேறு எங்கும் கிடைப்பதில்லையாம்! கடல் தன்னகத்தே மனிதன் காணமுடியாத எவ்வளவு பொருள்களைக் கொண்டுள்ளதோ? சிருஷ்டியின் விசித்திரம்தான் என்னே என்று எண்ணித் திகைத்தோம்! இராமேஸ்வரம் செல்லுவோர் இவைகளில் சிலவற்றையேனும் வாங்காமல் வரமுடியாது. ஆடவர்களாகிய நாங்களே இங்கிலையடைந்தோம் என்றால் பெண் மக்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

இவைகளை விற்கும் வியாபாரிகள் மிகவும் திறமை வாய்ந்தவர்கள். எந்தப் பொருளில் நாட்டம் கொள்ளுகின்றோம் என்பதை எளிதில் கண்டுகொள்ளுகிறார்கள். எல்லா வியாபாரிகளும் "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்பதை நன்கு உணர்ந்தவர்கள். 'எல்லோரும் ஓர் விலை எல்லோரும் ஓர் நிறை' என்று பாரதியார் பாடிய தேசிய தத்துவம் இவ்வியாபாரிகளிடம் நூற்றுக்கு நூறு பொருத்தம்.

இராமேசுவரத்தில் உள்ள வழிகாட்டிகள் அசாதாரண பேர்வழிகள். அவர்களுக்கு எதிலும் பெரும் புத்தியே தவிர சில்லறை புத்தி கிடையாது. 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்ற உண்மையை வாழ்க்கையில் நன்கு

143773 JL

கடைப்பிடிப்பவர்கள். சில நிமிஷங்கள் நம்முடன் வந்து அது, இது என்று தங்களுக்குத் தெரிந்தவற்றைச் சொல்லி முடித்தவுடன் பத்து இருபது ரூபாய் தான் சன்மான மாய்க் கேட்பார்களே யன்றி அதிகமாய்க் கேட்பதில்லை.

இராமேஸ்வரம் செல்பவர்களுக்கு ஒரு வார்த்தை. எமன் நம்மை நேரில் வந்து அழைப்பதில்லை. நம்மிடம் பயம் அதிகமோ என்னவோ தெரியாது. ஒரு வேளை அவனே வந்து அழைத்தாலும் அவனிடமிருந்து தப்பலாம். ஆனால் இராமேஸ்வரத்தில் உள்ள வழிகாட்டிகளிடம் சிக்கினால் தப்பவே முடியாது. இதனால் இராமேஸ்வரம் போக வேண்டாமென்று சொல்லவில்லை, செல்லுங்கள். நீங்களே பாருங்கள்; ஒருவரும் உதவி வேண்டாம்.

பின்னர் தனுஷ்கோடி சென்றோம். புகைவண்டி நிலையத்திலிருந்து இரண்டு மைல் மணற்பரப்பில் நடந்து செல்லல் வேண்டும். கடல் அலைகளின்றி ஆழமின்றி அமைதியுடன் இருக்கின்றது. பல மைல் தூரம் அதிக ஆழமில்லையாம். இவ்விடத்தில் நீராடுதல் ஒன்றே புனிதமாய்க் கருதப் படுகின்றது. நாங்கள் கடலில் மூழ்கி ஆடிப்பாடி ஆனந்தம் அடைந்தோம்.

யாத்திரிகர்கள் காலையில் வந்தால் கடல் நீராடி உடனே புறப்பட வேண்டியது தான். ரயில் நிலையத் தங்குமிடம் தவிர வேறு இடமில்லை. குடிசைகள் நிறைந்த ஊர் அருகில் இருக்கின்றது. அங்கு இருந்த குடிசைகளும் கோயில் ஒன்றும் கடல் அரிப்பால் நீரில் மூழ்கிவிட்டன. ஒரு புறம் கடல் புரண்டு முன்னேறி வருகிறது. மற்றொரு புறம் வெகு தூரம் தள்ளிச் செல்லுகிறது. தனுஷ்கோடிப் புகை வண்டி நிலயமும் விரைவில் கடல் கோளால் அழியும் என்று கருதுகின்றார்கள்.

யாத்திரிகர்களின் பொருட்டு உணவு விடுதி ஒன்று ரயில்வே இலாகாவினால் நடத்தப்படுகிறது. அது உணவுவிடுதியா? ஈக்கடையா? என்னும் ஐயமுண்டாகிறது. பண்டங்களின் மேலும், உண்பவர்கள் மேலும் ஈக்கள் மொய்க்கும் அருவருப்பைச் சகிக்க முடியவில்லை. உண்ணும் போது ஈக்களைக் கையால் ஓட்டிக் கொண்டே உண்டோம். தனுஷ்கோடிப் புகைவண்டி நிலையம் அசுத்தத்தின் உறைவிடம். அதற்குச் சாட்சி ஈக்கள். அந்தச் சிற்றூரில் குடிசை ஒன்றில் அழுக்கு நிறைந்த மணல் தரையில் பள்ளிக்கூடம் ஒன்று நடக்கிறது. பள்ளிக்கேற்ற சூழ்நிலை இல்லாத அந்த இடத்தில் படிக்கும் இளம் பிள்ளைகளுக்கு எத்தகைய மன வளர்ச்சி ஏற்படும்? அங்குள்ள ஈக்களிடமிருந்து ஒருவாறு தப்பிப் புகை வண்டியேறித் திருச்சி வந்தோம்.

திருப்பராய்த்துறையில் இராமகிருஷ்ண தபோவனத்தில் தங்கி உணவு கொண்டு திருவரங்கம் வந்தோம். பெரிய கோயிலைக் கண்டோம். ஆலய மதிற்சுவர்களுக்குள்ளேயே நகர் முழுவதும் அடங்கியிருக்கிறது. அகன்ற பெரிய வீதிகளும் கடைகளும் கோயிலுட்பகுதியில் தான் உள்ளன. நகரம் கொள்ளிடம் காவிரி என்னும் நதிகளுக்கிடையில் அமைந்திருத்தலினால் "அரங்கம்" என்ற பெயர் பெற்றது. நகரின் புறங்களில் தென்னை வாழை மா முதலிய மரவகைகள் செழித்து வளர்ந்திருக்கின்றன.

மூலத்தான மூர்த்தி கிடந்த கோலத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றது. அழகிய வேலைப்பாடுகள் அமைந்த சிற்பங்கள் ஆலயத்தில் காட்சியளிக்கின்றன. இத்தலத்தை ஆழ்வார்கள் பலர் பாடியிருக்கின்றனர். பொன் மயமாய்த்திகழும் மூலத்தானம் கண்டோர் கண்களுக்குப் பெருவிருந்தாயிருக்கின்றது. கம்பர் தாம் இயற்றிய இராம காவியத்தை திருவரங்கப் பெருமான் முன்னிலையில் அரங்கேற்றினார்.

அங்கிருந்து திருவானைக்கா வந்தோம். ஆனைக்கா என்பது யானை பூசித்துப் பேறு பெற்றமையால் வந்த பெயர். மூலத்தானச் சிவலிங்கத்தைச் சுற்றிலும் நீர் சுரந்து கொண்டேயிருக்கிறது. பஞ்சபூதஸ்தலங்களில் அப்பு ஸ்தலம் இது. அப்பு—நீர். ஊர் அவ்வளவு பெரியதாயில்லை. ஆனைக்காவில் உறையும் ஆதியை வழிபட்டுத் திருச்சி வந்தோம்.

திருச்சியில் தெப்பக்குளம், உச்சிப் பிள்ளையார் ஆலயம் தாயுமானவர் ஆலயம் முதலியவற்றைக் கண்டோம். மலை உச்சியிலிருந்து நகரக் காட்சியைக் கண்டு கும்பகோணம் வந்தோம்.

கும்பகோண மகாமகக்குளம் பாசி நிறைந்தது. பெரிய தெரு என்பது மிகப் பொருத்தமான பெயர். பூங்கா மிக அழகுடன் காணப்படுகின்றது. கும்பேஸ்வரர் ஆலயம் பழமைக்கு எடுத்துக்காட்டு. இங்குள்ள உயர் நிலைப்பள்ளி பல அறிஞர்கள் பயின்ற சிறப்புவாய்ந்தது. தென்னிந்தியாவில் மிகப் பழமைவாய்ந்ததெனக் கேள்வியுற்றோம்.

கும்பகோணத்துக்கு அண்மையில் உள்ள சுவாமி மலைக்குச் சென்றோம். ஆனால் இங்கு மலை இல்லை. ஆலயத்தை உயரமாய்க் கட்டிப் படிகள் அமைத்திருக்கின்றார்கள். உயரமான மேற்பகுதியில் முருகன் திருவுருவம் அமைக்கப்பட்டிருக்கிறது. முருகன், இறைவனுக்குப் பிரணவப் பொருளை உபதேசம் செய்தபடியால் சுவாமிநாதன் எனவும், அவன் உறைவிடம் சுவாமிமலை எனவும் சொல்லப் படுகின்றது. முருகனுக்குரிய ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருவேரகம் இது என்று பலர் எண்ணுகின்றார்கள். ஆனால் சுவாமிமலையைப் பற்றி வழங்கும் வரலாறு ஒன்றும் திருமுருகாற்றுப் படையில் காணப்படவில்லை. பத்துப் பாட்டுக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் திருவே

ரகம் என்பது மலை நாட்டில் உள்ளதொரு தலம் என்றே எழுதியிருக்கின்றார்.

இங்கிருந்து தஞ்சை வந்தோம். ராஜராஜேஸ்வரம் பணிந்தோம். ராஜராஜன் திருப்பணிகளைக் கண்டு போற்றி மாயூரம் வழியாகத் திருமறைக் காட்டை அடைந்தோம்.

திருமறைக் காடு வேதாரண்யம் என்ற பெயரில் வழங்கப் படுகின்றது. தேவாரம் முதலிய நூல்களில் மறைக் காடு என்ற பெயரே காணப்படுகின்றது. மறைகள் பூசித்தமையால் இப் பெயர் பெற்றது. இது கடற்கரை யடுத்த ஊர். உப்பு வயல்கள் அதிகம். சவுக்கு மரங்கள் மிகுதியாய் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மின்சார வசதி உண்டு.

சமய குரவர்களாகிய அப்பரும் சம்பந்தரும் இத்தலத்துக்கு வந்து, மறைகள் பூசித்த நாள் தொடங்கி மூடிக் கிடந்த ஆலயக் கதவை திறக்கவும் மூடவும் அருள் பாலிக்கும் வண்ணம் இறைவனை வேண்டிப் பாடல்கள் பாடினர் என்பது பெரிய புராண வரலாறு.

காந்தியடிகள் நடத்திய தண்டி உப்பு சத்தியாக்கிரகமும் வேதாரண்யத்தில் நடந்த உப்புச் சத்தியாக்கிரகமும் இந்தியச் சுதந்தரப் போராட்டத்தில் தனிச் சிறப்பு வாய்ந்தவை. தேச விடுதலையின் பொருட்டு பெருந்தியாகம் செய்த வீரராகிய சர்தார் வேதரத்தினம் பிள்ளையவர்கள் இங்குக் கன்னியா குருகுலம் ஒன்றை அமைத்து உயர்ந்த முறையில் நடத்தி வருகின்றார்கள். இரவு இந்நகரில் தங்கிக் காலையில் கோடிக் கரை சென்றோம். கோடிக் கரை தனுஷ் கோடியைப் போன்ற புண்ணிய தீர்த்தக் கரை. அங்கிருந்து நாங்கள் திருவாரூரை அடைந்தோம்.

திருவாரூர் அகன்ற பெரிய வீதிகளை உடையது. பண்டைக் காலத்தில் சோழர்களுக்குத் தலை நகராயிருந்தது.

கமலாலயம் எனப்படும் மிகப் பெரிய ஆலயமும் குளமும் இங்குள்ளன. பிரசித்தி பெற்ற திருவாரூர்த் தேர் இப் போது சாதாரணமாய் இருக்கிறது.

பசுவின் கன்றைக் கொன்ற தன் மகனைக் கீழே கிடத்தித் தேர்ச் சக்கரத்தை மார்பில் செலுத்திக் கொன்ற மனுநீதிச் சோழனுடைய வரலாறு நகரச் சிறப்பாகப் பெரிய புராணத்தில் இடம் பெற்றிருக்கின்றது. பெரிய புராணம் இயற்றுவதற்கு முதல் நூலாகிய திருத் தொண்டத்தொகை சுந்தரமூர்த்தி சுவாமிகளால் இங்கு பாடப்பட்டது; திருநாவலூரில் அவர் பிறந்தவராயினும் தம்மை ஆரூரன் என்று கூறிக் கொள்வதனுல் அவருக்கு இத் தலத்தின் மீது இருந்த ஆரா அன்பு வெளிப்படுகின்றது.

இறைவன் இங்கு புற்று வடிவமாயிருத்தலினுல் அவருக்கு வன்மீக நாதர் என்று பெயர் உண்டாயிற்று. (வன்மீகம்–புற்று) தியாகராஜர் என்பது உற்சவ மூர்த்தியின் பெயர். இம் மூர்த்தி முசுகுந்தச் சக்கரவர்த்தியால் வானுலகத்திலிருந்து கொண்டு வரப்பட்டதென்பர். தியாகேசமூர்த்தம் அமைந்த இடம் பொன்னெளி வீசியிலங்குகின்றது. திருவாரூர் சப்த விடங்கத்தலங்களில் வீதி விடங்கத்தலமாகும்.

திருவாரூரைப் பற்றிப் பல புலவர்கள் அரிய பல நூல்களை இயற்றி இருக்கின்றூர்கள். ஐந்திலக்கணமும் அமைந்த இலக்கண விளக்கம் என்னும் நூலைச் செய்த வைத்தியநாத நாவலரும் இவ்வூரினரே.

'திருவாரூரிற் பிறக்க முத்தி'–என்பது சைவ சமய நூல்களின் துணிபு. திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன் என்று பாடினுர் சுந்தரர். இத்தலத்தைக் கண்டு வணங்கிப் புள்ளிருக்கும்வேளூர் என்னும் வைத்தீஸ்வரன் கோயிலை அடைந்தோம். பிறவிப் பிணிக்கு மருந்

தருளும் பெருமானுய இறைவன் எழுந்தருளியிருத்தலினுல் வைத்தீஸ்வரன் கோயில் எனப் பெயர் வந்தது.

இத் தலத்தில் எழுந் தருளியிருக்கும் முத்துக் குமார சாமிமூர்த்தி, பெருமையும் அழகும் பெற்றது. இங்கு பலர் இம் மூர்த்தியைக் குல தெய்வமாகக் கொண்டு வழி படுவர். முத்துக்குமாரசாமிப் பிள்ளைத் தமிழ் என்ற நூல் குமரகுருபரரால் இம் முருகப் பெருமான் மீது பாடப் பட்டது. இங்கு வழிபாடு செய்து சீர்காழியைச் சேர்ந் தோம்.

சமய குரவர்தளில் முதல்வராய ஞானசம்பந்தப் பெரு மான் அவதாரம் செய்யப் பெற்ற தலம் இது. இங்குள்ள இறைவன் தோணியப்பர் என்ற பெயருடையவர். உலகப் பிரளயம் உண்டான போது காழி நகரை தோணி போல் மிதக்கச் செய்தமையால் இறைவனுக்குத் தோணியப்பர் என்றும் இந்நகருக்குத் தோணிபுரம் எனவும் பெயர் வழங்குவதாயிற்று. இங்குள்ள சட்டநாதப் பெருமானை யும் தோணியப்பரையும் வணங்கி, ஞானப்பால் அளித்த வரலாற்றை எண்ணிப் போற்றிச் சிதம்பரத்தை அடைந் தோம்.

இலக்கியங்களும் சமய நூல்களும் சிதம்பரத்தைத் தில்லை என்றே கூறுகின்றன. தில்லை என்ற ஒருவகை மரம் நிறைந்திருந்த காரணத்தால் தில்லை என்ற பெயர் உண்டாயிற்று. அம் மரமே தல விருக்ஷம். தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்களுள் தில்லையே முதலிடம் பெறுவது. இங்கு நட்டம் பயிலும் நம்பன் திருக் கூத்து அண்ட சராசரம் அனைத்தும் இயங்க ஆடும் திருக் கூத் தாம். "எங்கும் சிதம்பரம் எங்கும் திருநட்டம்" என்னும் வாக்கியம் இதனை வலியுறுத்தும்.

பஞ்சபூத ஸ்தலங்களுள் ஆகாய ஸ்தலமாய்த் தில்லையைக் கொள்வர். ஆகாயம் என்பது வெளி. இப்பர வெளியில் நிறைந்து நின்று உலகை இயக்கித் தானும் இயங்கும் அப்பரம் பொருளின் உருவமாய்த் தில்லைக் கூத்தனையும், சிற்றம்பலத்தையும் அமைத்து மக்கள் வழிபட்டார்கள். இக் கூத்துருவம் அமைந்த இடம் முன்பு மிகச் சிறியதாய் இருந்தது. பல மன்னர்கள் திருப்பணியால் இப்போதுள்ள அளவு கோயில் விரிந்தது. அச் சிறிய இடமே சிற்சபை, சிற்றம்பலம் என வழங்கப்பட்டது. சிற்சபை என்னும் சொல் மாறிச் சிதம்பரம் என வழங்கலாயிற்று.

சிற்சபையின் மேற்கூரை ஏனைய ஆலயங்களில் அமைத்திருத்தல் போலன்றி, சாதாரண வீடுகளின் கூரை போல் இருக்கின்றது. மலையாள நாட்டுக் கோயில்களிலும் இங்ஙனம் இருத்தலைக் காணலாம். சிற்றம்பலக் கூரை 21600 தங்க ஓடுகளால் ஆகியது. சோழ மன்னர்கள் இவ்வோடுகளுக்குப் பொன் வேய்ந்த செய்தியைக் கல் வெட்டுக்களால் அறியலாம்.

மனிதன் நிமிஷத்துக்குப் பதினைந்து முறை மூச்சு விடுகின்றான். அக்கணக்குப்படி நாள் ஒன்றுக்கு 21600 மூச்சாகின்றன. அம் மூச்சுக்குள் இருந்து உயிர்க்குயிராய் அனைத்துயிர்களையும் இறைவன் இயக்குகின்றான் என்னும் தத்துவத்தைப் புலப்படுத்தவே இவ்வாறமைத்தனர் எனவும், சிற் சபையின் தூண்களுக்கும், படிகளுக்கும், கற்களுக்கும் தத்துவார்த்தங்கள் உண்டு எனவும் அறிஞர் கூறுவர்.

தில்லையின் பெருமைகளை விளக்கும் நூல்கள் திருமுறைகளும் கோயிற்புராணமுமேயாம். கோயிற் புராணம் உமாபதி சிவம் என்ற மெய்ஞ்ஞானியால் இயற்றப் பட்டது.

தில்லைத்திருக்கூத்தன் நடனத்தில் 'ஐம்பெருந் தொழில்கள்' நிகழ்தலை 'ஞான நூலாகிய' உண்மை விளக்கத்தில் வரும் 'தோற்றம் துடியதனில்' என்ற செய்யுள் விளக்கும். திருநடம் கண்டு களித்த 'ஞானிகள் பலர் அதன் சிறப்பை' எடுத்து விரித்தோதினர். நாவரசர் 'குனித்த புருவமும்' என்ற தேவாரத்தில் அவன் திருக்கூத்தினைக் காணப் பெற்றால் மனிதப் பிறவியும் இந்நிலவுலகில் வேண்டுவதே என்று அப்பேரின்பத்தைத் தெளிவு படுத்தினர்.

இத்தலத்தில் மாணிக்கவாசகர் திருநாளைப் போவார் முதலிய மெய்யடியார்கள் கூத்தன் திருவுருவில் கலந்து வீடு பேறு அடைந்தார்கள். இறைவன் 'உலகெலாம்' என்று அடியெடுத்துத் தர சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணம் பாடி அரங்கேற்றியதும் இத்தலத்தில் தான். இத்தகைய பெருஞ் சிறப்புக்கள் பல கொண்ட திருத்தலம் புதுப்பிக்கப் பெற்றுக் குடமுழுக்கும் நடந்தது. லக்ஷக் கணக்கான அன்பர்கள் கண்டுகளித்துப் பெறுதற்கரிய பேறு பெற்றார்கள். நாங்கள் அம்பலக் கூத்தன் அருள்--திருவுருவைக் கண்ணாரக் கண்டுகளித்துக் கோவிந்தராஜப் பெருமானையும் சேவித்து எங்கள் ஊரை அடைந்தோம்.

நாங்கள் இந்த யாத்திரையால் பெற்ற அனுபவங்களும் பயனும் பல. உலகியல் வியவகாரங்களிலேயே சிந்தனை செலுத்தி அவற்றைப் பற்றிய எண்ணங்களையே எண்ணி வந்த எங்களுக்குப் பாரமார்த்திகத்தைப் பற்றிச் சிந்திப்பதற்கு வாய்ப்பு உண்டாயிற்று.

கண்ட காட்சிகளைப் பற்றிய மகிழ்ச்சியும், புதுப்புதுக் காட்சிகளைக் காணப் போகின்றோம் என்ற உணர்ச்சியும் உள்ளத்தில் நிறைந் திருந்தமையால் யாத்திரையில் உணவு முதலியன பற்றிய குறைகள் சிறிதும் தோன்ற

வில்லை. சுருங்கச் சொன்னுல் இன்ப உலகில் சஞ்சரித்தல் போன்ற நிலையே மேலோங்கி நின்றது.

நாங்கள் கண்ட ஆலயங்கள் வெறும் கட்டிடங்கள் அல்ல. இறைவன் திருவருளால் ஞானப் பெருவாழ்வில் திளைத்த மெய்யடியார்கள் வழங்கிய தத்துவ உண்மைகள் நிறைந்த கருவூலங்கள் எனவும், மாறுபடும் மக்களும் பொருளும் நிறைந்த நாட்டில் என்றும் மாருத சமயக் கருத்துக்களை ஞானசாதகர்களுக்குச் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கும் பரம் பொருளின் தூல வடிவங்கள் என்றும் கூறலாம்.

இத்தகைய உண்மைகளை வழங்கும் ஆலயங்களும் பிறவும் எங்கள் ஊனக் கண்களுக்குப் புலனுகாமல் இப்போது மறைந்தாலும், அநக் காட்சியில் இன்பம் வழங்கிய வண்ணமே திகழ்கின்றன.

அணைத் திட்டங்கள்

ஒரு திட்டம் ஒரு காரியத்துக்கோ அல்லது பல காரியங்களுக்கோ பயன்படலாம். அதை, அதன் வியாபகத் தன்மையும், அதற்காகும் செலவையும் ஒட்டி, பெரிய அல்லது சிறிய அல்லது நடுத்தரத் திட்டமென்று பாகுபடுத்தலாம். இக் கட்டுரையில், திட்டங்களுக்காகும் செலவை யொட்டி, அவைகளைப் பிரித்து விவரிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ஐந்து கோடி ரூபாய்க்கு மேற்பட்டு, செலவாகும் திட்டம் பெரிய திட்டமாகும்; ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்டு.ஐந்து கோடி ரூபாய் வரை செலவு செய்யப்படும் திட்டம் நடுத்தரத் திட்டமாகும்; பத்து லட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு ஒரு கோடி ரூபாய் வரை செலவாகும் திட்டம் சிறிய திட்டமாகும்.

வெள்ளத்தடுப்பு, பாசனம், மின்சாரம் போன்றவற்றின் ஒரு அம்சத்தையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அம்சங்களையோ வலியுறுத்தி, பல காரியத் திட்டமாகவே பெரிய திட்டமொன்று வகுப்பது மிகவும் விரும்பத்தக்கது. இதற்கு உதாரணங்களாக விளங்கும் பக்ரா, நந்திகொண்டா பாசனத் திட்டங்களில், மின்சார உற்பத்தி, துணை அம்சமாக விளங்குகிறது; வெள்ளத் தடுப்பையும் பாசனத்தையும் வலியுறுத்தி தாமோதர் நதிப் பள்ளத்தாக்குத் திட்டமும் கோசி நதித் திட்டமும் உருவாக்கப்பட்டுள்ளன; ரீஹாண்ட், கோய்னா திட்டங்களோ, மின்சார உற்பத்திக்காக மட்டுமே வகுக்கப்பட்டுள்ளன.

பெரிய திட்டங்கள்

இத் திட்டங்களுக்கு பெருமளவில் பணம் செலவாகும். குறைந்த செலவில் அதிகமாக மின்சார உற்பத்தி செய்து அதன் மூலம் ராஜ்யத்திலுள்ள கனி ஆதாரங்களைப் பயன் படுத்தித் தொழில் வளத்தைப் பெருக்குவதற்குத் தகுதி யானவையாகவும், உணவுத் தானியங்கள், வாணிபப் பயிர் கள் விளைச்சல்களுக்காக, பெரும் பரப்புள்ள சாகுபடி நிலப் பகுதிகளை, பாசனத்தின் கீழ் கொண்டுவருவதற்கு வசதி அளிப்பவையாகவுமுள்ள பிரதேசங்களில், பெரிய திட்டங்களை நிறைவேற்ற ஏற்பாடு செய்வதுண்டு.

இம்மாதிரியான திட்டங்கள் உருவாவதற்கு வெகு நாட்கள் பிடிக்கும்; ஏனெனில், ஜல—மின்சாரத்தை உற் பத்தி செய்து, விநியோகிக்கும் முறை, கால்வாய்கள், அணைக்கட்டு அமைப்புகள் ஆகியவை போன்ற திட்டத் தின் பல்வேறுபட்ட அம்சங்களை, தொழில் நுட்பந் தெரிந்த சிப்பந்திகளும், அதிகாரிகளும், நன்முக ஆராய்ந்து, விரிவா கத் திட்டமிட வேண்டியிருக்கிறது. பொதுவாக, வெளி நாடுகளிலிருந்து வரவழைக்கப்படவிருக்கும் யந்திர சாத னங்கள் வருவதில் தவக்கமேற்பட்டாலும், அல்லது நிதி வசதி இல்லாவிட்டாலும், அல்லது அதிக எண்ணிக்கையில் தேவைப்படும் பயிற்சி பெற்ற சிப்பந்திகளும் விசேஷத் தொழில் திறமையுள்ள சிப்பந்திகளும் கிடைக்காவிட்டா லும், அல்லது சரியான காலத்தில் மூலப்பொருள்கள் வரா விட்டாலும், இம்மாதிரியான திட்டங்களைப் பூர்த்திசெய் வதற்காக நிர்ணயிக்கப்பட்டிருந்த இலட்சிய அளவுகளை மீண்டும் மீண்டும் திருத்தியமைக்க வேண்டியிருக்கிறது. திட்டத்தை உருவாக்குவோரால் கட்டுப்படுத்த முடியாத் காரணங்கள் இருப்பதால், பொதுவாக, இத்திட்டங்களுக் கான மதிப்பீடுகள் ஒரே நிலையாக இருப்பதில்லை. திட்டத் தின் கீழ் நடைபெறும் நிர்மாண வேலைகள் 7 வருஷம் முதல்

10 வருஷம்வரை நீடித்து நடக்கும். ஆகவே, இம்மாதிரியான திட்டங்கள் மூலம் கிடைக்கவிருக்கும் பலன்களைப் பெறுவதற்கு வெகு நாட்கள் பிடிக்கிறது.

இத்திட்டங்கள், பொதுவாக, லாபந்தரத்தக்கவையே; அதாவது. திட்டத்தை நிறைவேற்ற, கடனாகப் பெறப்படும் முதலீட்டுத் தொகைமீது விதிக்கப்படும் வட்டி விகிதத்துக்குச் சரியாகவோ அல்லது அதற்கு மேற்பட்டோ, திட்ட முதலீட்டிலிருந்து கிடைக்கப்பெறும் வருமான விகிதம் இருக்கிறது.

அதிக அளவில் உணவு தானியங்களை உற்பத்தி செய்வதற்கும், தொழில் வளத்தைப் பெருக்குவதற்கும் அதன் மூலம் வேலை அளிப்பு வாய்ப்பை அதிகரிப்பதற்கும் உரிய சர்க்காரின் நீண்டகாலக் கொள்கையை நிறைவேற்றுவதற்கு, பெரிய திட்டங்கள் உறுதுணையாக விளங்கும்.

நடுத்தரத் திட்டங்களும், சிறு திட்டங்களும்

நடுத்தர, சிறு திட்டங்களின் வியாபகமோ ஓரளவு வரையறுக்கப்பட்டுள்ளது. இவை ஓடும் நீரைத் திருப்புவதற்காகவோ அல்லது தேக்குவதற்காகவோ அல்லது இவ்விரு காரியங்களையும் செய்வதற்காகவோ உருவாக்கப்படலாம். பொதுவாக, இவற்றின் மூலம், ஒரு காரியம் தான்—அதாவது பாசனமோ அல்லது மின்சார உற்பத்தியோ—நிறைவேற்றப்படுகிறது.

இத்திட்டங்களை இறுதியாக உருவாக்குவதற்கான ஆராய்ச்சிகளை நடத்துவதற்குச் சில நாட்களே பிடிக்கும். அதாவது, பெரிய திட்டத்தைவிட இத்திட்டத்தைத் துரிதமாகத் தயாரித்து அங்கீகாரம் பெற்றுவிட முடியும். இம்மாதிரியான திட்டங்களை நிறைவேற்ற பொதுவாக, அதிக அளவில் யந்திர சாதனங்கள் தேவைப்படாது; ஆதலால்

திட்டச் செலவுகளை மிகவும் சிறந்தவகையில் மதிப்பிட்டு, திட்ட இலட்சிய அளவுகளையும் நிச்சயமாக எய்து விடுவது சாத்தியமே. இத்திட்ட வேலைகளும் சிறிய அளவில் இருப்பதால், இவ்வேலைகளை, ஸ்தலத்திலேயே கிடைக்கும் பொருள்களையும், ஆட்களையும் கொண்டு, திட்ட காலத்துக்குள்ளாகவே, துரிதமாக நிறைவேற்றிப் பூர்த்திசெய்து விடலாம்.

பற்றுக்குறைப் பிரதேசங்களிலும் பஞ்சம் நிலவியுள்ள பிரதேசங்களிலும், மக்களுக்குப் பெரிதும் தேவைப்படும் வேலை அளிப்புக்கான ஏற்பாட்டைச் செய்வதற்காக, அப்பிரதேசங்களில் இத்திட்டங்களைச் சிறந்தவகையில் நிறைவேற்றலாம். மற்றும், ராஜ்ய முழுவதிலும் ஒரே ரீதியில் பலன்கள் பெறச் செய்யும் நோக்கத்துடனும், இத் திட்டங்களை, இதர இடங்களிலும் நிறைவேற்றலாம்.

நடுத்தரத் திட்டங்கள் சம்பந்தப்பட்டமட்டில், ஓர் ஏக்கர் நிலத்துக்கு அதன் மூலம் பாசனம் கிடைப்பதற்காக ஆகும் செலவு, பொதுவாக அதிகப்படியாக இருக்கும். அத்துடன், அத்திட்டங்கள் மூலம் கிடைக்கும் வருமான விகிதமும், பெரிய திட்டங்கள் மூலம் கிடைக்கும் வருமான விகித்தை விடக் குறைவாக இருக்கும். இத்திட்டங்கள் விஷயத்தில் ஒரு குறை உண்டு. திட்டம் நிறைவேற்றப்படும் நீர்ப்பிடிப்புப் பிரதேசத்தில் மழை பெய்யத் தவறினல், திட்டமே வெற்றிகரமாக நிறைவேற முடியாமற் போவதற்கான வாய்ப்புகள் அதிகமாகிவிடும்; ஆனல், பெரிய திட்டங்கள் சம்பந்தப்பட்டமட்டில், இத்தகைய வாய்ப்புகள் குறைவுதான். ஏனெனில், அவை பெரிய நீர்ப்பிடிப்புப் பிரதேசங்கள் பூராவிலும் வியாபித்திருப்பதால் ஓரிடத்தில் மழை பெய்யத் தவறினல், அது, நீர்ப்பிடிப்பு முழுவதிலும் உள்ள நீரோட்டத்தைப் பாதிக்காது.

திட்டங்களால் ஏற்படும் பலன்கள்

நம் நாட்டின் தொழில், விவசாயப் பொருளாதாரத்தில், இத்திட்டங்கள்—பெரிய, சிறிய, நடுத்தரத் திட்டங்கள்—ஒவ்வொன்றிற்கும் உரிய பங்கு உண்டு. ஆனபோதிலும், அவற்றிற்குச் சில வரையறைகளும் உண்டு.

கண்டவாறுகத் திட்டமிட்டால், திட்டங்கள் ஒன்றோடொன்று வீணுக இணைக்கப்பட்டு அவைகளினுல் ஏற்படக் கூடிய பலன்களும் குறைந்து, பொருள்சேதமும் ஏற்படக் கூடுமாதலால், ஒவ்வொரு ராஜ்யத்துக்கும் கூட்டாக இணைக்கப்பட்டதொரு திட்டத்தை வகுப்பது மூலம் மிகச் சிறந்த பலன்கள் கிட்டும். அத்திட்டத்தை, நாடு முழுவதுக்கும் உரிய மாபெருந் திட்டத்துடன் இணைத்துவிடலாம். ஸ்தல தேவைகள், ஆட்பலம், பொருட்பலம் ஆகியவற்றை அனுசரித்து வகுக்கப்படும் பெரிய, சிறிய, நடுத்தரத் திட்டங்களை, நம் நாட்டில் மாறிவரும் தேவைகளுக்குத் தகுந்தவாறு அத்திட்டங்களின் முக்கியத்துவத்தையொட்டி நிர்ணயிக்கப்படும் நிகழ்ச்சி நிரல்படி, அடுத்தடுத்து நிறைவேற்றிவருவதன் மூலம்தான், பாசனம், மின்சாரம், வெள்ளத்தடுப்பு ஆகிய காரியங்களுக்காக, ஜலசக்தியை உச்சபட்ச அளவில் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

செய்திக் கோவை

ருஷ்யாவில் பண்டித நேரு

ருஷ்யாவில் மத்திய ஆசியக் குடியரசான உஸ்பெக்கிஸ்தானின் தலைநகரான டாஷ்கெண்ட் நகருக்குப் பண்டித நேரு விஜயம் செய்தார். விமான நிலையத்தில் உஸ்பெக் நகரவாசி ஒருவர் நேருவுக்கு உருதுவில் வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்தார். அதற்கு நேருவும் உருது மொழியிலேயே பதிலளித்தபொழுது மக்கள் சந்தோஷ ஆரவாரம் செய்தனர். விமான நிலையத்திலும், வழியில் ஆறு மைல் நீளமுள்ள சாலையின் இரு மருங்கிலும் லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் மணிக்கணக்காகக் காத்திருந்து நேருவை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். துர்கிமேனியாவிலும், உஸ்பெக்கிஸ்தானிலும் மக்களை "சலாம் ஆலேகும்" என்று சொல்லி நேரு வாழ்த்தினர். மக்களும் "ஆலேகும் சலாம்" என்று சொல்லி சந்தோஷ ஆரவாரம் செய்து மலர் மாரி தூவினர்.

"எனக்கு இன்று ஒரு மகன் பிறந்திருக்கிறன். அவனுக்கு ஜவாஹர்லால் என்று பெயர் வைக்க உங்கள் அனுமதியைக் கோருகிறேன்" என்று அலர்பெய்ஜானிலிருந்து ஒரு கலைஞர் நேருவுக்குத் தந்திச் செய்தி அனுப்பினர். புதிதாகப் பிறந்துள்ள பெண்ணுக்கு "இந்திரா" என்று பெயர் வைக்க விரும்புவதாகவும் மற்ருெரு ருஷ்யர் தந்திச் செய்தி அனுப்பினர்.

சைபீரியப் பாலைவனத்திலுள்ள குப்ரின்ஸ்கி ராஜ்யப் பண்ணையை நேரு பார்வையிட்டார்.

கனரக யந்திரத் தொழிற்சாலையுள்ள ஸ்வெர்ட்லாவஸ்க் நகருக்கு நேரு விஜயம் செய்து தொழிற்சாலையைப் பார்வையிட்டார். ருஷ்யாவிலே மிகப் பெரிய தொழிற்சாலை இது. இங்கே அரை அங்குலத் திருகாணியிலிருந்து இரண்டாயிரம் டன் கனமுள்ள உருக்கு யந்திரங்கள் வரை தயாராகின்றன.

பிரதம மந்திரி நேரு மாஸ்கோ திரும்பினார். ருஷ்யத் தலைவர்களுடன் இரண்டு மணி நேரம் சம்பாஷித்தார். ருஷ்யாவின் பிரதம மந்திரி மார்ஷல் புல்கானின் இந்தியாவுக்கு விஜயம் செய்ய தமது அழைப்பை ஏற்றுக் கொண்டு விட்டதாகவும் ஆனால் வரும் தேதி நிச்சயமாகவில்லை யென்றும் நேரு தெரிவித்தார்.

ருஷ்ய அணுசக்தி நிலையத்தை நேரு பார்வையிட்டார். கம்யூனிஸ்டு அல்லாத அந்நியர் எவரும் இதுவரை இதனைப் பார்த்ததில்லை. ஐயாயிரம் கிலோவாட் கொண்ட இத்தகைய நிலையம் உலகத்திலேயே முதன்மையானது என்று கூறப்படுகிறது.

இந்தியப் பிரதம மந்திரி நேருவும், ருஷ்யப் பிரதம மந்திரி புல்கானினும் ஒரு கூட்டறிக்கையில் கையெழுத்திட்டனர்.

கூட்டறிக்கையில் பஞ்சசீலக் கொள்கை ஊர்ஜிதம் செய்யப் பெற்றது. இரு நாடுகளும் பொருளாதார, கலாசார, விஞ்ஞானத் துறைகளில் ஒத்துழைக்கத் தீர்மானித்துள்ளன. பாண்டுங் மகாநாட்டு முடிவுகளை இரு நாடுகளும் வரவேற்றன.

போலந்தில் நேரு

நேரு போலந்தின் தலைநகரான வார்ஸா சேர்ந்தார். போலந்தின் பிரதம மந்திரி ஸிரான்ஸ்கிவிக்ஸ், தற்காப்பு

மந்திரி, போலந்து கம்யூனிஸ்டுக் கட்சியின் பிரதம காரிய தரிசி பெய்ரூட் முதலியோர் விமான நிலயத்தில் வரவேற்றனர். பல்லாயிரக் கணக்கான போலந்து வாசிகள் மலர் மாரி பொழிந்து நேருவை வரவேற்றனர்.

போலந்துப் பிரதம மந்திரி ஸிரான்ஸ்கியும், இந்தியப் பிரதம மந்திரி நேருவும் வெளியிட்ட கூட்டறிக்கையில் பஞ்சசீலக் கொள்கைகளை ஊர்ஜிதம் செய்திருக்கின்றனர்.

ஆஸ்திரியாவில் நேரு

விசேஷ ருஷ்ய விமானத்தில் நேரு ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னு சேர்ந்தார். ஆஸ்திரியப் பிரதம மந்திரி டாக்டர் ஜூலியாஸ் ராப் விமான நிலயத்தில் வரவேற்ருர்.

காலஞ் சென்ற நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் மனைவி ஸ்ரீமதி எமிலி, நேதாஜியின் மகள் குமாரி அனிதா போஸ் இருவரையும் நேரு சந்தித்து அவர்களுடன் உண வருந்தினுர்.

யுகோஸ்லாவியாவில் நேரு

யுகோஸ்லாவியாவின் தலைநகரான பெல்கிரேட் நக ருக்கு நேரு விஜயம் செய்தார். விமான நிலயத்தில் ஜனுதிபதி மார்ஷல் டிட்டோ வரவேற்ருர். பெல்கிரேடு நகரில் தெருக்களில் பல்லாயிரக் கணக்கான மக்கள் அணி அணியாக நின்று நேருவை வரவேற்று ஆரவாரம் செய்தனர். வீதியின் முக்கிய இடங்களில் ஹிந்தி மொழியில் நேருவை வரவேற்கும் மகரதோரணங்கள் காணப்பட்டன.

பெல்கிரேடு நகர சபை, நேருவுக்குப் பெல்கிரேட் பிரஜா உரிமைப் பட்டயத்தை வழங்கிக் கௌரவித்தது.

நேருவின் பிரசங்கத்தைக் கேட்பதற்காகவே யுகோஸ்லாவியா பார்லிமெண்டின் விசேஷக் கூட்டம் நடை

பெற்றது. அதில் பேசுகையில், சகிப்புத் தன்மையும் நிதானமும் வளர வேண்டுமென்றும், யுத்தத்துக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டுமென்றும், பெரிய நாடான சீனுவுக்கு ஐக்கிய நாடுகள் சபையில் அனுமதி மறுக்கப்படுவதைப் போல் அதிக ஆபத்தானது வேறு இருக்க முடியாது என்றும் நேரு கூறினர்.

மார்ஷல் டிட்டோவும் நேருவும் பஞ்சசீலக் கொள்கைகளை மீண்டும் உறுதிப்படுத்தி ஒரு கூட்டறிக்கை வெளியிட்டனர்.

இத்தாலியில் நேரு

இத்தாலியின் தலைநகரான ரோமாபுரிக்கு நேரு விஜயம் செய்தார். இத்தாலியப் பிரதம மந்திரி புரபஸர் ஸெக்னி நேருவை விமான நிலையத்தில் வரவேற்றார்.

வாடிகன் நகரில் நேரு போப்பாண்டவரைப் பேட்டி கண்டார். நேருவின் உலக சமாதானப் பணிக்கு போப்பாண்டவர் ஆசி கூறினர்.

லண்டனில் நேரு

பிரிட்டிஷ் பிரதம மந்திரி அந்தோணி ஈடனின் அழைப்புக்கிணங்கி, விசேஷ பிரிட்டிஷ்விமானத்தில் நேரு லண்டன் சென்றார். அந்தோணி ஈடன் நேருவை விமான நிலையத்தில் வரவேற்றார். ஈடனின் விருந்தினராக நேரு லண்டனில் சில நாட்கள் தங்கினர். ருஷ்யாவின் சமாதான ஆர்வத்தை நேரு விளக்கினர். வியட்நாம் தேர்தல் நடைமுறை பற்றியும், வரப்போகும் நால்வர் மகாநாடு பற்றியும் பேசினர்கள்.

கெய்ரோவில் நேரு

தாய்நாடு திரும்பும் வழியில் நேரு எகிப்தின் தலைநகரான கெய்ரோவில் தங்கினர். பிரதம மந்திரி நாஸர் வரவேற்றார். நேருவுக்கு மக்கள் ராஜோபசாரம் செய்தனர்.

பம்பாயில் நேரு

சமாதான திக் விஜயம் முடிந்து நேரு இந்தியா திரும்பினுர். பம்பாய் விமான நிலையத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் வரவேற்றனர். பம்பாய் நகரசபையார் விமான நிலையத்திலேயே வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தனர்.

புது டில்லியில் நேரு

ஐந்து வாரம் ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் செய்த பின்னர் இந்தியப் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு ஜுலை 13ந் தேதி புது டில்லி திரும்பினுர். இந்திய ஜனுதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத் உள்பட பல்லாயிரக் கணக்கான மக்கள் நேருவை ஆர்வத்துடன் வரவேற்றனர்.

அர்ஜெண்டிஞவில் கலகம்

அர்ஜெண்டிஞவின் ஜனுதிபதி பெரான் அரசாங்கத்துக்கு எதிராக, கடற்படை விமானப் படையைச் சேர்ந்த தலைவர்கள் தலைநகரான பியூனஸ்அயர்ஸில் கலகம் செய்தனர். அரசாங்க மாளிகை அருகே ஐந்து குண்டுகள் வீசப்பட்டன. ஜனுதிபதி பெரான் இறந்து விட்டதாகவும் வதந்திகளைக் கிளப்பினர்.

ருஷ்யாவில் அமெரிக்க ஸ்தானிக அதிகாரிகள்

ருஷ்யாவில் உள்ள அமெரிக்க ஸ்தானிக காரியாலயத்தைச் சேர்ந்த மூன்று அமெரிக்க அதிகாரிகளை ருஷ்ய அரசாங்கம் வெளியேற்றிவிட்டது. இந்த மூன்று அதிகாரிகளும் முறை தவறி நடந்ததாகவும், இவர்கள் "விரும்பத்தகாத ஆசாமிகள்" என்றும் ருஷ்ய அரசாங்கம் குற்றம் சாட்டி யிருக்கிறது.

டாக்டர் கான் சாகேப்

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபைக்கு, பலுச்சிஸ்தானுக்குள்ள ஒரே ஸ்தானத்துக்கு மந்திரி டாக்டர் கான் சாகேப் தேர்ந்தெடுக்கப்பெற்றார். மொத்தம் 87 ஓட்டுகளில் அவருக்கு 68 ஓட்டுகள் கிடைத்தன.

பாகிஸ்தான் பிரதம மந்திரி ஸ்ரீ முகம்மதலி அரசியல் நிர்ணய சபைக்குக் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து முஸ்லிம் லீக் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

டிட்டோ ருஷ்யா செல்வார்

யுகோஸ்லாவியாவின் ஜனாதிபதி மார்ஷல் டிட்டோவை ருஷ்யாவுக்கு விஜயம் செய்யுமாறு ருஷ்ய அரசாங்கம் அழைத்தது. இந்த அழைப்பை மார்ஷல் டிட்டோ ஏற்றுக் கொண்டார்.

ஐக்கிய நாடுகள் சபை

ஐக்கிய நாடுகள் சபையின் பத்தாவது ஆண்டு விழா, சபை பிறந்த சான்பிரான்ஸிஸ்கோ நகரத்து மண்டபத்திலேயே கொண்டாடப் பெற்றது.

பத்தாவது ஆண்டில் எல்லா நாடுகளும் கையெழுத்திட்டு ஒரு பிரகடனம் வெளியிட்டன. இதற்கு 'சான்பிரான்ஸிஸ்கோ பிரகடனம்' என்று பெயர். இதில் உள்ள முக்கிய ஷரத்துக்கள் நான்கு.

1. யுத்த நாசத்துக்கு இரையாகாமல் வருங்கால சந்ததிகளைக் காப்பதற்கு உறுதி கொண்டிருப்பதாக எல்லா நாடுகளும் ஊர்ஜிதம் செய்கின்றன.

2. ஐக்கிய நாடுகளின் சாசனத்தின் கொள்கைகளையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றும் பணிக்கு அங்கத்தினர் நாடுகள் தங்களை மீண்டும் அர்ப்பணித்துக் கொள்கின்றன.

3. உலக அமைதி, பாதுகாப்பு, நீதி ஆகியவற்றுக்கு அபாயமில்லாத முறையில் சமாதான வழியில் தகராறுகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், சமாதானமாகவும் இணக்கமாகவும் ஒன்றுபட்டு வாழவேண்டும் என்றும் ஐக்கிய நாடுகளின் சாசனம் கூறுகிறது. அதன் படியே சர்வதேசத் தகராறுகளைச் சமாதானமாகத் தீர்த்துக் கொள்ள புது முயற்சிகளில் இறங்க உறுதி கொண்டிருப்பதாக அங்கத்தினர் நாடுகள் ஊர்ஜிதம் செய்கின்றன.

4. ஆயுதப் பரிகரணத் திட்டம் சம்பந்தமாக உடன்பாடு காண தீவிர முயற்சி செய்வதாகவும் அங்கத்தினர் நாடுகள் ஊர்ஜிதம் செய்கின்றன.

நியூகினி

தர்மகர்த்தாப் பிரதேசமான நியூகினியை ஆஸ்திரேலியா நிர்வகிக்கும் விதத்தை ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியப் பிரதிநிதி ஸ்ரீ ஜெயபாலசிங் கண்டித்தார். முப்பத்தைந்து வருஷ ஆட்சிக்குப் பின்னரும், நியூகினியில் கால் பாகத்தில் ஆஸ்திரேலியா நிர்வாக முறை எதையும் ஏற்படுத்தவில்லை. அப்பகுதியில் எத்தகைய மக்கள் வாழ்கின்றார்கள் என்பதே ஆஸ்திரேலியாவுக்குத் தெரியாதென்றும் இந்த நிலை விசித்திரமானது என்றும் நியூகினியின் பொருளாதார நிலையும் படுமோசமாய் இருக்கிறதென்றும் ஸ்ரீ சிங் கூறினார். ஆஸ்திரேலியப் பிரதிநிதி ஸ்ரீ பார்ஸே பதிலளிக்கையில் நியூகினியின் மத்தியப் பிரதேசத்தில் மட்டுமே தாங்கள் இன்னும் பிரவேசிக்கவில்லை யென்றும், நியூகினிக்கு விஜயம் செய்யாமலேயே ஸ்ரீ சிங் இவ்வாறு பேசுவதாகவும், இவருடைய கருத்துக்களை ஆஸ்திரேலியாவில் உள்ள இந்தியப் பிரதிநிதி கூட பூரணமாக ஆதரிக்கவில்லை யென்றும் கூறினார்.

தென்னுப்பிரிக்கப் பிரச்னே

இன வேற்றுமைக் கொள்கை சம்பந்தமாக தென்னுப்பிரிக்காவுடன் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் எழுந்துள்ள விவகாரத்துக்கு பிரேஸில் நாட்டைச் சேர்ந்த ஸ்ரீ லூயி டிபரோவை மத்தியஸ்தராக ஐக்கிய நாடுகள் சபையின் காரியதரிசி நியமித்திருக்கிருர்.

ராணுவக் கூட்டு

துருக்கியும் ஈராக்கும் இவ்வருஷம் பிப்ரவரியில் கையெழுத்திட்ட துருக்கி-ஈராக் ராணுவஒப்பந்தத்தில் பாகிஸ்தானும் சேர முடிவு செய்து விட்டதென்று பாகிஸ்தான் பிரதம மந்திரி முகமதலி தெரிவித்தார்.

பர்மா—ருஷ்யா ஒப்பந்தம்

பர்மாவும் ருஷ்யாவும், தங்கள் நாடுகளுக்கிடையே வர்த்தகத்தை வளர்க்கவும், வர்த்தகத்தொடர்புகளைப் பலப்படுத்திக் கொள்ளவும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டன. இதன்படி ருஷ்யா சுமார் இரண்டு லட்சம் டன் பர்மா அரிசி வாங்கிக் கொண்டு அதற்குப் பதிலாக ருஷ்ய யந்திரங்களை பர்மாவுக்கு அளிக்கும்.

ஐஸன்ஹவர்—ஊநு கூட்டறிக்கை

அமெரிக்காவின் தலைநகரான வாஷிங்டனிலிருந்து ஜனுதிபதி ஐஸன்ஹவரும், பர்மா பிரதம மந்திரி ஊநுவும் தாங்கள் கூடிப் பேசியது சம்பந்தமாக ஒரு கூட்டறிக்கை வெளியிட்டிருக்கின்றனர். அதில் ஆசியாவின் சமாதானம், பாதுகாப்பு சம்பந்தமான பிரச்னைகளைக் குறித்து அவர்கள் ஆராய்ந்ததாகவும், ஐக்கிய நாடுகளின் சாசனத்தை உறுதியுடனும் விசுவாசத்துடனும் ஆதரிப்பது தான் உலக சமாதானத்தை நிலைநிறுத்துவதற்குச் சிறந்த வழி என்ற

தங்கள் நம்பிக்கையை ஊர்ஜிதம் செய்வதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

ஏழை விவசாயிக்கு நிலம்

எகிப்தின் மாஜி மன்னர் பரூக், மற்றும் மாஜி அரச குடும்பத்தினருக்குச் சொந்தமான இருபத்தாறுயிரம் ஏக்கர் நிலத்தை மேற்கு எகிப்தில் நகஅமாதி என்ற இடத்தில் நிலமில்லாத விவசாயிகளுக்கு எகிப்திய பிரதம மந்திரி நாஸர் விநியோகித்தார். புரட்சி அரசாங்கம் ஏற்பட்டதிலிருந்து இதுவரை ஏழைகளுக்கு விநியோகிக்கப்பட்ட நிலம் ஒன்றேகால் லட்சம் ஏக்கர்.

இந்தோனேஷ்யாவில் நெருக்கடி

இந்தோனேஷ்ய ராணுவக் காரியாலயத் தலைவர் நியமனம் பற்றிய தகராறு பெரிய அரசியல் நெருக்கடியாக முற்றி விட்டது. இப்பதவிக்கு ஜெனரல் உடோஜோ என்பவரை நியமிக்கக் காரணமாக இருந்த பாதுகாப்பு மந்திரி ஸ்ரீ சுமந்திரி தமது பதவியை ராஜிநாமாச் செய்து விட்டார். இதன் காரணமாக மந்திரி சபை ஆட்டம் கண்டு விட்டது. பிரதம மந்திரி சஸ்திரமியோயோ விரைவில் ராஜிநாமாச் செய்வார் என்று கூறப்படுகிறது.

கோவா

போர்த்துகலிலேயே கட்டுப்பாடின்றி சுயேச்சையான பொதுஜன வாக்கெடுப்பு நடத்தினால், போர்த்துகல் மக்களில் நூற்றுக்கு எண்பது பேர் நிச்சயமாக கோவாவுக்குச் சுதந்திரம் வழங்குவதை ஆதரித்து ஓட் செய்வார்கள் என்று கோவா தேசபக்தர் டாக்டர் கெய்டொண்டே பம்பாயில் கூறினர்.

டாமனில்

போர்த்துகீசிய அதிகாரிகளுக்கு எதிராக ஆப்பிரிக்க நீக்ரோ சிப்பாய்கள் புரட்சி செய்ததாகவும், அதன்

விளைவாக இருபது ஆப்பிரிக்க நீக்ரோ சிப்பாய்கள் சுட்டுக் கொல்லப் பட்டதாகவும், அந்தப் பிரேதங்களுடன் கல்லைக் கட்டி அவைகளைக் கடலில் எறிந்து விட்டதாகவும், டாமனிலிருந்து இந்தியாவுக்கு வந்துள்ள அகதிகள் சிலர் கூறினர்.

டாமன் கவர்னர்

போர்த்துகீசியரான டாமன் கவர்னர் அங்கிருந்து தப்பி இந்தியாவில் அரசியல் சரணடையத் திட்ட மிட்டிருந்ததாகவும், ஆனால் இச் செய்தி வெளியாகி விடவே, கவர்னர் தப்பிக்க முயன்றால் அவரைச் சுடுமாறு ராணுவத் தலைவர் கட்டளையிட்டுள்ளதாகவும் ஒரு செய்தி கூறுகிறது. டாமன் விடுதலைக்கான சத்தியாக்கிரகம் வலுத்து வருவதைக் கண்டு பீதியுற்ற கவர்னர் ஏற்கெனவே தமது மனைவியையும், சொத்துக்களையும் போர்த்துகல்லின் தலைநகரான லிஸ்பனுக்கு அனுப்பி விட்டதாகத் தெரிகிறது.

கிறிஸ்துவப் பத்திரிகை புத்திமதி

பாகிஸ்தானின் பிரபல பத்திரிகையான "கிறிஸ்துவர் குரல்" எழுதியுள்ள ஒரு தலையங்கத்தில், போர்த்துகல் கோவாவுக்குச் சுதந்திரம் வழங்கி, அது இந்தியாவுடன் ஐக்கியமாக அநுமதிக்குமாறு வற்புறுத்தியுள்ளது. இந்து இந்தியாவில் கோவாவின் கிறிஸ்துவ நாகரிகத்துக்கு ஆபத்து என்ற போர்த்துசியக் கூற்று வீண் பிரமை என்றும் அப்பத்திரிகை சுட்டிக்காட்டிற்று.

டியூ

டியூ எல்லை அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்தியப் போலீஸ்காரர்கள் மீது போர்த்துகீசியப் போலீசார் சுட்டதாகவும், இந்தியப் போலீஸ் சேவகர் ஒருவரை கடத்திச் சென்று விட்டதாகவும் தெரிகிறது.

சுதந்திர யாத்திரை

கோவா விடுதலைப் போர் ஆரம்பமாகி எட்டு ஆண்டு கள் நிறைந்தன. இந்திய மண்ணில் அந்நிய ஆதிக்கம் நீடிப் பதை மக்கள் எதிர்ப்பதன் அடையாளமாக 127 பேர் கொண்ட பெரிய சத்தியாக்கிரகத் தொண்டர்ப் படை கோவாவுக்குள் பிரவேசித்தது. இதுவரை கோவாவுக்குள் நுழைந்த சத்தியாக்கிரகப் படைகளில் இதுவே பெரிது. கொட்டும் மழையில் அடர்ந்த பயங்கரமான காடுகளின் வழி யாக சேற்றிலும் சகதியிலுமாக அவர்கள் முன்னேறிச் சென்றது, அவர்களின் வீர உறுதியைப் பிரதிபலித்தது.

வயோதிகர்களும் இளைஞர்களும், சமூக ஊழியர் களும், பத்திரிகையாளர்களும், அரசியல் தலைவர்களும், சட்டசபை அங்கத்தினர்களும் கொண்ட இத் தொண்டர்ப் படை மூன்று பிரிவினர்களாக கோவாவுக்குள் நுழைந் தது. இத்தொண்டர்ப் படையில் மிக்க முதியவர் எழுபது வயதுள்ள ஓய்வு பெற்ற பள்ளி ஆசிரியர் சதாசிவராவ் பகுல்.

கடும் எச்சரிக்கை

கோவா சத்தியாக்கிரகிகளுக்கு போர்த்துகீசிய அதி காரிகள் இழைத்து வரும் காட்டுமிராண்டித் தனமான கொடுமைகள் பற்றி இந்திய அரசாங்கம் போர்த்துகல் அரசாங்கத்துக்குக் கடுமையாக எச்சரிக்கை செய்திருக் கிறது.

கோவாவுக்கு "சுயாட்சி"

கோவா முதலிய போர்த்துகீசிய உடைமைப் பிரதேசங் களுக்கு, நிர்வாக நீதி விவகாரங்களில் 'சுயாட்சி' வழங்கு வதற்கான திட்ட மொன்றை போர்த்துகீசிய அரசாங்கம் அங்கீகரித்திருக்கிறது. இத் திட்டம் ஆகஸ்டு முதல் தேதி முதல் அமுலுக்கு வரலாம்.

கோவா முதலிய திட்டுக்கள் எல்லாவற்றுக்கும் சேர்ந்து ஒரு சட்ட சபை அமைக்கப் பெறும். சட்டசபையில் 23 அங்கத்தினர்கள் இருப்பார்கள். இவர்களில் 18 பேரை பொதுமக்கள் தேர்ந்தெடுப்பார்கள். ஐவரை அரசாங்கம் நியமிக்கும்.

இந்த பதினெட்டுப் பேரிலும், பதினொரு பேர் தான் நேரடி ஓட் மூலம் தேர்ந்தெடுக்கப் பெறுவார்கள். மற்ற ஏழு பேரை, நிர்வாக, பொருளாதார, குடியானவர் ஸ்தாபனங்கள் தேர்ந்தெடுக்கும்.

இந்தச் சட்டசபை வருஷத்துக்கு இரண்டு முறை கோவாவில் கூடும். கவர்னர்—ஜெனரலோ அவர் பிரதிநிதியோ தலைமை வகிப்பார்.

வெளிநாட்டுக் கொள்கை சம்பந்தமாகவும், இத் திட்டுக்களில் "போர்த்துகீசிய சமுதாயம் முழுவதன் நலன்" சம்பந்தமாகவும் சட்டமியற்ற கோவா சட்டசபைக்கு அதிகாரம் கிடையாது.

இந்தப் புதிய சீர்திருத்தங்களை போலிச் சீர்திருத்தம் என்றும், அது அச்சிடப் பட்டிருக்கும் காகிதத்துக்கு உள்ள மதிப்புக்கூட அதற்குக் கிடையாது என்றும் கோவாப் பிரமுகர் ஒருவர் கூறினர்.

போப்பாண்டவர் ஆதரவு

கோவா அரசியல் பிரச்னையே, மதப்பிரச்னை அல்ல என்று போப்பாண்டவர் கூறியதாக, நேரு ரோம் நகரில் அறிவித்தார்.

இந்தியாவில் சுமார் எண்பது லட்சம் கத்தோலிக்க கிறிஸ்துவர்கள் வசிக்கின்றனர். கோவாவில் சுமார் இரண்டு லட்சம் கத்தோலிக்கர் வசிக்கிறனர்.

போர்த்துகல் அரசாங்கத்தில் பிளவு

போர்த்துகல்லில் ஸலஸார் மந்திரி சபையிலிருந்து ஐவர் ராஜிநாமாச் செய்தனர். விலகியவர்களில் ஏகாதிபத்திய மந்திரி ரோட்ரிகஸும் ஒருவர். இந்தியாவிலுள்ள போர்த்துகீசியப் பிரதேசங்களும் இவரது ஆளுகையில் இருந்தன.

கோவாவில் பன்னிரண்டாயிரம் துருப்புக்களை வைத்திருப்பதற்கு ஏராளமாகப் பணம் செலவாகிறது என்றும் இந்தியாவில் போர்த்துகீசிய ஆதிக்கம் நீடிப்பது உசிதமல்ல என்றும், விலகிய மந்திரிகள் கருதினார்களாம்.

நிலச் சீர்திருத்தம்

சென்னை ராஜ்யத்தில் நிலச் சீர்திருத்தத்தைப் பற்றி விவசாயிகள் பயப்படத் தேவையில்லை என்றும், இந்தச் சட்டத்தினால் எட்டுப் பேரில் ஏழு பேர் பாதிக்கப்பட மாட்டார்கள் என்றும் சென்னை விவசாய மந்திரி கூறினார்.

தஞ்சை ஜில்லாவில் நடைபெற்ற விவசாயிகள், தொழிலாளர், நிலச்சுவான்தார் மகாநாட்டில், கோயில் முதலிய தர்ம ஸ்தாபனங்களின் நிலங்களை நிலச்சீர்த்திருத்தச் சட்டத்தின் கீழ் கொண்டு வர வேண்டுமென்றும், நில வரம்பின் அதிக பட்ச எல்லை ஐம்பது ஏகர் என்று நிர்ணயிப்பது நியாயம் என்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

குடும்பத் தலைவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் மாத வருமானம் ரூபாய் நூற்றைம்பது கிடைக்கக் கூடிய வகையிலும், ஏனையோருக்கு மாதம் நூறு ரூபாய் கிடைக்கும் வகையிலும் நில உடைமையை வரையறுக்க வேண்டுமென்று திருவாங்கூர்–கொச்சின் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது.

தமிழ் போதனை மொழி

கல்லூரிகளில் தமிழைப் போதனை மொழியாக்க வழி வகைகளைக்கூறவும், கலைச்சொல் அகராதி ஒன்று தயாரிக்க குழு அமைக்கவும், சென்னை சர்வகலாசாலைக் கட்டிடத்தில் கல்வி மந்திரியின் தலைமையில் ஒரு மகாநாடு நடைபெற்றது. கல்விப் பிரமுகர்களும் முக்கிய அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

ரயில் வசதி

இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தின் கீழ் 1800 மைல் நீள முள்ள மின்சார ரயில் பாதை அமைக்கப் பெறு மென்றும், கொல்லம்—எர்ணுகுளம் ரயில் பாதை மின்சார ரயில் பாதையாக இருக்கும் என்றும் தெரிகிறது.

சேலம்--கன்யாகுமரி, மங்களூர்--பெங்களூர் ரயில் பாதைகள் போடுவதற்குத் திட்டங்கள் தயாராக இருப் பதாக உதவி ரயில்வே மந்திரி தெரிவித்தார்.

கிராமக் கடன் வசதி

1960ஆம் வருஷத்தில் இந்திய அரசாங்கத்தால் கிராம மக்கள் கடன் வசதிக்காக 250 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டுமென்று ஒரு லட்சிய அளவை ஏற்படுத்திக்கொண் டிருப்பதாக இந்திய அரசாங்க விவசாய மந்திரி கூறினார்.

தனுஷ்கோடி துறைமுகம்

தனுஷ்கோடியில் கடல் அரிப்பால் ஏற்பட்டுள்ள நிலைமை அபாயமானால், தனுஷ்கோடி துறைமுகம் ஆரியன் குண்டு அல்லது இரட்டைத் தாழி என்னுமிடத்துக்கு மாற்றப் பெறலாம் என்று இந்திய அரசாங்கத்தார் கூறு கின்றனர்.

சூரிய கிரஹணம்

சரித்திரத்திலேயே அதிக நேரம் பிடித்த கிரஹணங்களில் ஒன்றுனதும், 1250 வருஷங்களில் மிக நீளமானதுமான சூரிய கிரஹணத்தை சென்னை மக்கள் நன்றாகக் காணக் கூடிய பாக்கியம் பெற்றிருந்தார்கள். ஐந்தாவது நாள் வளர்பிறைச் சந்திரன் அளவுக்குத் தேய்ந்து வளர்ந்த இரண்டு மணி நேர சூரிய கிரஹணத்தின் போது சென்னை ஆகாயம் மேகமில்லாமல் மிகத் தெளிவாக இருந்தது.

கிரஹணத்துக்குப் பின் லட்சக் கணக்கான மக்கள் கடல் ஸ்நானம் செய்தனர்.

பூரண மதுவிலக்கு

1950ஆம் வருஷம் அக்டோபர் மாதம் இரண்டாம் தேதிக்குள் எல்லா ராஜ்ய அரசாங்கங்களும் பூரண மதுவிலக்குக்கான எல்லா ஏற்பாடுகளையும் பூர்த்தி செய்து விடவேண்டுமென்று மதுவிலக்குக் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது.

ஹிந்தி மொழி

ஹிந்தி கட்டாய பாடமாக்கப் பட்டு பரீட்சை நடத்தப் பட்டாலும் கூட, உத்தியோக நியமனங்களுக்கு அதன் மார்க்குகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாதென்பது உண்மையில் தம்முடைய அபிப்பிராயமென்று ஜனதிபதி ராஜேந்திர பிரசாத் கூறினர்.

Edited, Printed and Published by A. K. CHETTIAR at
Kumari Malar Press, 100, Mowbrays Road, Madras-18

ஆசிரியரின் புதிய பிரயாண நூல்கள்:

(2) அமெரிக்க நாட்டில்

●

(3) கரிபியன் கடலும் கயானுவும்

●

(4) ஐரோப்பா வழியாக

விரைவில் வெளிவரும்

KUMARI MALAR REGD. NO. M. 48

புதிய பிரயாண நூல்

மலேயா முதல் கானடா வரை

'உலகம் சுற்றும் தமிழன்'
ஏ. கே. செட்டியார்
எழுதியது

மலேயா, சிங்கப்பூர், இந்தோனேஷியா—ஜாவா, பாலி, சுமத்ரா—, ஆஸ்திரேலியா, பீஜித் தீவுகள், கானடா முதலிய நாடுகளில் பிரயாண அனுபவங்கள்.

விலை ரூபாய் ஐந்து